sidbi

# ஸ்வவலம்பன்

அமைதியற்ற கனவுகளின் சிறகுகள்.......

ஸ்வவலம்பன் இன்ஃபோ ஸீரீஸ்

வால்யூம் -IV



# ஸ்வவலம்பன்

*அமைதியற்ற கனவுகளின் சிறகுகள்.......*

# நிறுவனங்களுக்கான

## குறு மற்றும் சிறு சிறப்பான நிர்வாகம்

## முன்னுரை

அன்பார்ந்த ஸ்வவலம்பியே,

ஸிட்பியின் ஸ்வவலம்பன் நல்வாழ்த்துக்கள் SIDBI!

விஷன் 2.0-ஐ ஏற்றுக் கொண்டு, SIDBI, இப்போது சம்பர்க் (இணைதல்), ஸம்பவாத் (கலந்துரையாடல்), சுரக்ஷா (பாதுகாப்பு) மற்றும் ஸம்பிரஷன் (பரவச் செய்தல்) ஆகியவற்றின் தீம்களுடன் புரொமோஷன் மற்றும் வளர்ச்சியில் தனது கவனத்தை மீண்டும் செலுத்துகிறது. இந்த விஷன். 2 நிறுவுதல் மற்றும் படிப்படியாக நிறுவதல் ஆகிய இரண்டிலும் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு (MSEs) பயனளிக்கும் விதமாக புதுமையான உள்ளடக்கி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஈடுபடுத்தும் குறிக்கோளைக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக இம்முயற்சி நாட்டில் மேலும் அதிக வேலை வாப்பையும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் உருவாக்கும். மேற்கொண்டு தொழில்முனைவோர் கலாச்சாரத்தைப் பரப்பி மற்றும் ஜன சமுகத்தினரை வேலை தேடுவோர் என்ற நிலையிலிருந்து வேலைகளை உருவாக்குவோர் என்ற நிலைக்கு உயர்த்தும் நோக்கிலும், மேலும் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்வதை தடுக்கும் நோக்கிலும் அடித்தட்டில் உள்ளோரக்கு/சேவைகள் கிடைக்கப் பெறாதவர்கள்/ குறைவான அளவிலேயே சேவைகள் பெறுவோர் உள்ள பகுதிகள்/பிராந்தியங்கள் மற்றும் ஒட்டுமொத்தமாக குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை கருத்தில் கொண்டு அவற்றின் வாழ்வாதாரங்களை மேம்மபடுத்தும் நோக்கிலும் இந்த வங்கியானது 2018-ம் ஆண்டில் மிஷன் ஸ்வவலம்பன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

ஸ்வவலம்பன் இன்ஃபோ ஸீரீஸ் என்பது நமது தற்போதைய மற்றும் திறன் வாய்ந்த ஸ்வலம்பிஸ் உடன் இணைப்பை ஏற்படுத்தி அவர்களின் கனவு தொழில் நிறுவனங்களை நிறுவி மெருகூட்டி அவர்களின் கனவுப் பயணத்திற்கு உதவிடும் அத்தகையதோர் முயற்சியாகும். இது தொழில்முனைவின் ஆரம்ப மற்றும் அட்வான்ஸ்டு அறிவை உங்கள் வீட்டிற்கே கொண்டு வந்து உங்களுக்காகவும் மற்றும் இதர மக்களின் பயன்களுக்காகவும் அண்மையில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்/ஸ்கீம்கள்/முயற்சிகளின் அப்டேட்ஸை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது

வாசகர்களின் அபிப்பிராயங்களின் பின்பலத்துடன் நாங்கள் தொடர்ந்து எங்களை மெருகேற்றி வருகிறோம். ஆகவே, அன்புகூர்ந்து உங்கள் அபிப்பிராயங்கள்/ விசாரிப்புகள்/ ஆலோசனைகளை தொடர்ந்து எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அதன் மூலம் ஒவ்வொரு வால்யூமிலும் எங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். நாங்கள் இதை எழுதும்போது எங்களுக்கு உண்டாகும் அதே உற்சாகத்துடன் இதை நீங்கள் அனுபவித்து படிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

மகிழ்வுடன் படியுங்கள்!


டீம் ஸ்வவலம்பன், SIDBI

*“ஸ்வவலம்பியாகுங்கள், தானே முன்னேறுங்கள், மற்றவர்களையும் முன்னேற்றுங்கள்”*



# எங்களது முந்தைய இதழ்களில்....





எங்களது முந்தைய இதழ்களில், ஸ்வ்வலம்பி என்பது யார், ஏன் மற்றும் எவ்வாறு ஆக முடியும் என்பதை அநேகமாக படித்திருப்பீர்கள். எங்களது இரண்டாவது வால்யூமில், நாங்கள் மகளிர் தொழில்முனைவர்கள் பற்றி பேசினோம். எங்களின் மூன்றாவது இதழ் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கு நாட்டில் கிடைக்கக் கூடிய ஸ்கீம்கள் மற்றும் முயற்சிகளின் கண்ணோட்டத்தை வழங்கினோம். இந்த வால்யூம்களை பெறுவதற்கு, காண்க : https://www.sidbi.in/en/publication-and-reports அல்லது https://udyamimitra.in/home/downloads. எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, MSEs அந்த நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகெங்குமுள்ள சிறு வர்த்தகங்கள் மக்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதோடு மட்டுமின்றி, நாட்டின் GDP-க்கும் குறிப்பிடும்படியான பங்களிப்பை வழங்குகின்றன. இந்நிலையில் இந்தியாவும் ஓர் விதிவிலக்கல்ல.

ஏராளமான MSEs, அதிகுறிப்பாக, காலம் காலமாக எங்கே அது குடும்பம் நடத்தும் வியாபாரமாக இருக்கிறதோ, அங்கே அவர்கள் தங்களின் சொந்த இன்டர்னல் ஸிஸ்டம் மற்றும் செயல்முறைகளை உருவாக்குகிறார்கள். இது தங்கள் பிஸ்னஸ்ஸை அவர்கள் தொடர்ந்து இசைவாகவும், சுமூகமாகவும் நடத்திச் செல்ல உதவும் அதே வேளையில், தொழில்துறையால், அதிலும் குறிப்பாக கார்ப்போரேட் அமைப்புகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான போக்குகளால் வீழ்ந்து விடும் அபாயமும் இதில் உள்ளது. தொழில்துறையால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படும் நிலையான பழக்கங்களை பின்பற்றி அதை தழுவிக்கொள்வது எந்த பிஸ்னஸ் வளர்ச்சிக்கும் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். கார்ப்போரேட் அமைப்புகளுக்கு இந்த நெறிமுறைகள் ஏற்கனவே நடப்பில் உள்ளன. MSEs நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய நிர்பந்தம் எதுவும் இல்லாத நிலையில், சிறு தொழில் நிறுவனங்கள் தங்களுக்கான மெக்கானிஸம் இருப்பதை பெரும்பாலும் புறக்கணித்து விடுகின்றன. இதன் விளைவால் MSEs நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும்போது அல்லது தங்கள் நிறுவனத்தையே படிப்படியாக உயர்த்தும் முயற்சியின்போது தடங்கல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. எங்களின் இந்த இதழ் MSEs சிறப்பான நிர்வகிப்புக்காக பின்பற்ற வேண்டிய பழக்கங்களைப் பற்றியும் எவ்வாறு தங்கள் வளர்ச்சிக்காக அவற்றை பயன்படுத்தி மிகச்சிறந்த பழக்கங்களை பின்பற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு நிகராக தங்கள் நிறுவனத்தை கொண்டு வரமுடியும் என்பதையும் முக்கியப்படுத்தி காட்டுகிறது.

# சிறப்பான நிர்வாகம்

உலக வங்கியின் விளக்கத்தின்படி, இது ஒரு மெக்கானிஸத்தின் ஸெட்டாக வரையறுக்கப்பட்டிருக்கிறது, சுய உரிமையானது நிர்வாகத்தை விட்டு தனிமைப்படுத்தும்போது அந்த நிறுவனங்கள் இதன் மூலமாகவே இயங்குகின்றன. ஒர நிறுவனம் அதிக எண்ணிக்கையிலான பங்குதாரர்களின் குழுமத்திலிருந்து அதற்கான ஃபண்டிங்கை பெறுகிறது. எனவே அசல் உரிமையாளர்களுக்கு கம்பெனியின் அன்றாட இயக்கத்தில் எந்த பங்கும் இருப்பதில்லை. நிர்வாக பணிகள் ஒரு மேனேஜ்மென்ட் டீமுக்கு தரப்படுகின்றன. சிறப்பான நிர்வாகம் என்பது சட்ட திட்டங்கள், ஒழுங்குமுறைகள், ஸிஸ்டம்ஸ் மற்றும் பிராஸஸ்களின் ஒரு தொகுப்பாகும். இவை அவர்களின் சொந்த நலன்களுக்காக செயல்படுவதற்கு மாறாக, அந்த நிறுவனத்தின் எல்லா உரிமையாளர்களின் நலன்களையும் உறுதி செய்கிறது.

அடிப்படையில் இது ஒரு பிராஸஸையும் உள்ளடக்கியுள்ளது. இதன் வாயிலாகவே நிறுவனத்தின் குறிக்கோள்கள் நிர்மாணிக்கப்பட்டு நாட்டின் ஒட்டுமொத்த சமூக-பொருளாதார, ஒழுங்குமுறை, மார்க்கெட்டின் சூழ்நிலை அமைப்பில் பின்பற்றப்படுகின்றன. இது தெள்ளத்தெளிவு, நாணயம் மற்றும் பொறுப்பு கூறல் ஆகியவற்றை உட்புகுத்தும் ஓர் மெக்கானிஸமாகும். ஒவ்வொரு நிறுவனமும் தனது நிர்வகிப்பு/ நிறுவனத்தின் குறிக்கோள்களின் சீரமைப்பு மோடை தீர்மானிக்கின்றன. அவை சிறப்பான நிர்வாகத்தின் நியதிகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப இயங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் சீரான நிர்வகிப்பு அமைப்பை ஏற்படுத்தி முடிவெடுக்கும் பொறுப்பு போர்டு ஆஃப் டைரக்டர்ஸ்/உரிமையாளர்கள்/ பார்ட்னரிடமே விடப் படுகிறது.

இந்த வடிவிலான பிஸ்னஸ், பகுதியாக பிஸ்னஸ்ஸின் உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகத்துக்குமிடையே உள்ள நல்லுறவை தீர்மானிக்கிறது. பிரிவாக்கத்தின் அளவு குறைவாக இருக்க கூடும் (உதாரணம்-ஏகபோக உரிமை) அல்லது குறிப்பிடும்படியானது (உதாரணம் - நடுத்தர நிறுவனம்). புரொப்ரைட்டர்ஷிப் மற்றும் நிறுவனங்களுக்கு இடைய ஏற்படக்கூடிய மோதல்கள், கருத்து வேறுபாடுகள் வாய்ப்பு குறைவைகவே இருக்கும், காரணம் பிஸ்னஸ்ஸை நடத்துபவர்கள் வருவாய் மற்றும் லாபத்தை மிகுதியாக்கும் நோக்கோடு அதை முன்வைத்து இயங்குபவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தங்கள் பிஸ்னஸ் நீக்கு போக்குகளில் சீரான நிர்வாகத்தின் உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது இகோ-ஸிஸ்டம் அதாவது அரசாங்கம், வாடிக்கையாளர்கள், ஸப்ளையர்கள், பேங்க் மற்றும் ஊழியர்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களின் பொறுப்புகளையும், கடமைகளையும் பூர்த்தி செய்பவர்களாக இருக்க வேண்டும்.

# சிறப்பான நிர்வாகத்தின் தேவை

சிறப்பான நிர்வாகம் ஏன் தேவை என்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று நலன்களின் மோதலை குறைப்பதாகும். இந்த கருத்து மோதல்கள் ஒரு நிருவனத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதில் இரு தரப்புக்கும் இடையே மாறான கருத்துகள் ஏற்படும்போது உண்டாகிறது. இந்த மோதல்கள் பங்குதாரர்கள் மற்றும் உச்சகட்ட நிர்வாகத்திடையே (பிரின்ஸிபல்- ஏஜன்ட் பிரச்சனை) மற்றும் பங்குதாரர்களிடையே (பிரின்ஸிபல்-பிரின்ஸிபில் பிரச்சனை) இருக்கக் கூடும்.

a) **பிரின்ஸிபல்-ஏஜன்ட் மோதல்:** இது உயர் நிர்வாகம் மற்றும் ஷேர்ஹோல்டர்களிடையே பிரிவு ஏற்படும்போது உண்டாகிறது. உரிமையாளர்கள்/ ஷேர்ஹோல்டர்கள் (பிரின்ஸிபல்) அதிக லாபத்தில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள், அதேசமயம் உயர்மட்ட நிர்வாகம் அல்லது முக்கிய சிப்பந்திக்கு (ஏஜன்ட்) நல்ல ஊதியம், சிறப்பான வேலை நிலவரம், கஸ்டமர்களுடன் நல்லுறவில் முன்னுரிமை தருவதில் ஆர்வம் காட்டுவதாக இருக்கலாம், மேலும் அது அதிக லாபத்தோடு இணையாமல் இருக்கலாம். இதுவே கருத்து மோதல்களுக்கு வழி வகுத்து விடும், எனவேதான் இங்கே இரு தரப்பினரையும் ஒன்றிணைத்து ஒன்றுடன் ஒன்று மோதுவதை தவிர்க்க சிறப்பான நிர்வாகம் அத்தியாவசியமானதாகும்.


b) **பிரின்ஸிபல்-பிரின்ஸிபல் மோதல்கள்:** தனிநபர் ஷேர்ஹோல்டர்கள்/உரிமையாளர்கள்/பார்ட்னர்கள், எல்லா பங்குதார்ர்களின் ஒட்டுமொத்த நலனுக்கு மாறாக, தங்களின் குறிப்பிட்ட நலனுக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும் அதனால் தங்கள் பாலிசிகளை முன்னிலை படுத்தப்படவேண்டும் என்று புரொஃபஷனல் மேனேஜ்மென்ட்டை நிர்பந்தப்படுத்தும்போது மோதல்கள் ஏற்படுகின்றன. இந்த இடத்தில் சிறப்பான நிர்வாகம் தலையிட்டு பிஸ்னஸ்ஸில் எல்லா பங்குதாரர்களின் நலன்களையும் ஒன்றிணைக்கிறது. ஒரு நிறுவனத்தை நிர்வகிக்க வேண்டுமென்றால் அங்கு ஒழுங்கை நிலைநிறுத்த சிறப்பான நிர்வாகம் கண்டிப்பாக தேவை. அதுவே வளர்ச்சி சுழர்சியில் மிகவும் உபயோகமானதாகவும் இருக்கும்.

# இந்தியாவில் சிறப்பான நிர்வாகம்

இந்தியாவில் தொழில் சாம்ராஜ்யங்கள் பாரம்பரியமாக குடும்பத்துக்கு சொந்தமானவையாகவே இருக்கின்றன. எனவே அங்கு பிஸ்னஸ்ஸை கையாள்வதில் குறிப்பிட்ட அளவில் மட்டுமே தடைகளையும், வரம்புகளையும் ஏற்படுத்த முடியும். குடும்ப உறுப்பினர்களே முதலாளிகளாக இருப்பதோடு உயர்மட்ட நிர்வகிப்பு பதவிகளில் அவர்களே இருக்கின்றனர். எனவே எல்லா முடிவுகளுமே குடும்பத்தினராலும், அந்த குடும்பங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களால் மட்டுமே தீர்மானிக்கப்படுகின்றன. கார்ப்போரேட் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில், ஈக்விடி மார்க்கெட்டின் உருமாற்றம் உரிமையானது குடும்பத்திலிருந்து பங்குதாரர்களுக்கு மாறுகிறது. இதைத் தொடர்ந்து கம்பெனி சட்டம் 1956, முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு போர்டு ஆஃப் டைரக்டர்கள் ஒன்றிணைந்த கருத்து தேவைப்படுகிறது. இந்த சட்டத்தின்படி 2000-ல் குமார் மங்கலம் பிர்லா கமிட்டி, 2003-ல் நாராயண மூர்த்தி கமிட்டி, 2012-ல் அடி கோத்ரெஜ் கமிட்டி மற்றும் 2017-ல் உதய் கோட்டக் கமிட்டி ஆகியவை SEBI-யால் ஏற்படுத்தப்பட்டன. இதுவே 2013-ல் இப்போதைய கார்ப்போரேட் நியதிகள், SEBI ரெகுலேஷன்கள், லிஸ்டிங் அக்ரீமென்ட் உருவாவதற்கு வழிவகுத்தன.

# சிறப்பான நிர்வாகத்தின் சித்தாந்தங்கள்

சிறப்பான கார்ப்போரேட் நிர்வாகத்தின் அடிப்படை கொள்கைகள் மூன்று அம்சங்களைக் கொண்டிருக்கினறன:



# சிறப்பான நிர்வாகத்தின் பண்பம்சங்கள்

பல்வேறு கமிட்டிகளால் அடையாளம் காட்டுள்ளபடி, சிறப்பான நிர்வாகத்தின் முக்கிய பண்பம்சங்கள் கீழ்க்கண்டவாறு:

| | |
|---|---|
| **ஒழுங்கு** | நிறுவனத்தின் சரியான மற்றும் ஒழுங்கான நடவடியில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஸ்டாண்டர்டுகள உறுதிபடுத்துதல் |
| **ஒளிவு மறைவற்ற தன்மை** | வெளிநபர் கூட நிறுவனத்தின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை அர்த்தபூர்வமாக பரிசீலிப்பதில் சௌகரியம் |
| **தன்னிச்சையான செயல்பாடு** | நலன்களில் மோதல்கள் தவிர்க்கப்படும் விதம் |
| **அக்கவுன்டபிலிடி** | நிறுவனத்தின் உடைமைகள் மற்றும் அதந் செயல்பாடுகள் தொடர்பாக தேவைப்படும் தகவல்களை, தேவைப்படுமானால் பெற்றுக் கொள்வதில் பங்குதாரரின் அதிகாரத்தை நிறைவு செய்தல். |
| **பொறுப்புணர்வு** | கம்பெனியின் செயல்பாடு மற்றும் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டால் அதை மேம்படுத்துவதற்கு எப்போது, எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ போதுமான நடவடிக்கைகளுடன் பொறுப்பை ஏற்றுக் கொள்வது |
| **நாணயம்** | கம்பெனியின் பலதரப்பட்ட பங்குதாரர்களின் அதிகாரங்களையும், நலன்களுக்கும் மதிப்பளித்து ஏற்றுக் கொள்வது |
| **சமூக பொறுப்புணர்வு** | இதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அதன் நடவடிக்கையில் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார தாக்கத்தோடு நெறிமுறை தரநிலைகளில் உறுதிப்பாடு. |
| **ஈக்விடி** | எல்லா பங்குதாரர்களுக்கும் அவர்கள் உரிமைகள் கவனித்துக் கொள்ளப்படுகின்றன என்ற உணர்வு ஏற்படுவதை உறுதி செய்து அவர்களுக்கு சரிசம வாய்ப்புகள் கிடைக்கின்றன என்பதை உணர வைத்தல் |

# சிறப்பான நிர்வாக பழக்கங்கள்: உங்கள் வர்த்தகத்திற்கு இறக்கைகளை அளிப்பதற்கு நிகரானதாகும்


## நான்-கார்ப்போரேட் MSEs-களுக்கு

- **வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மை:** முறையான நிர்வகிப்பு அமைப்புடன் இயங்கும் பிஸ்னஸிற்கு தெளிவான கண்ணோட்டமும் நோக்கத்தின் உணர்வும் இருக்கிறது. இதுவே எல்லா பங்குதாரர்களும் திறம்பட செயல்படுவதற்கு வழி செய்து அதன் மூலம் பிஸ்னஸ் விருத்தி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு வழி செய்கிறது.
- **மலிவான கிரடிட்டை கவர்தல்:** சிறப்பான நிர்வாக அமைப்புள்ள பிஸ்னஸ் கிரடிட்டர்களுக்கு MSE-யில் நம்பிக்கை வைக்கும் உணர்வை அளிக்கிறது (கம்பெனிக்கு கிரடிட் வழங்கியோர்). அதுவே பிற்காலத்தில் நிதி நிறுவனங்களிடமிருந்து மலிவான கிரடிட் பெறுவதில் சிறப்பாக பேரம் பேது வைத்திட வழி செய்யும்.
- **வாடிக்கையாளர்களின் லாயல்டியை கவர்தல்:** MSE தனது பிராடக்டை இதர பெரிய தொழில்நிறுவனத்துக்கோ அல்லது ரீடெய்ல் கஸ்டமர்களுக்கோ ஸப்ளை செய்கிறது என்றாலும், பிஸ்னஸ்ஸின் தரத்திற்கு எப்போதுமே டிமாண்ட் இருக்கும். சிறப்பான நிர்வாக அமைப்பு பிராண்டு வேல்யூவை உருவாக்க வழிசெய்து நம்பகத்தை மிகுதியாக்கும். அதன்மூலம் வாடிக்கையாளர்களின் லாயல்டி பெருகும்.
- **படிப்படியான வளர்ச்சி:** சிறிய அளவில் தொடங்கப்பட்ட எந்த பிஸ்னஸ் ஆக இருந்தாலும் சரி, அது தொடர்ந்து விருத்தியாகிக் கொண்டே போகும் மற்றும் போட்டி நிறைந்த மார்க்கெட்டில் நீடித்து நிலைத்திருக்கும் வகையில் உரு மாற்றம் பெறும். சிறப்பான நிர்வகிப்பு அமைப்பை தொடர்ந்த வைத்துக் கொள்வது காலப்போக்கிற்கு ஏற்ப தன்னை வைத்துக் கொள்வதை உறுதி செய்வதைத் தொடர்ந்து சிறப்பான நிர்வாகத்தை கடைபிடிக்கும். மேலும் சரளமாக அடுத்த கட்ட வளர்ச்சிக்கு காலப்போக்கில் தன்னை மாற்றிக் கொள்ளும்.
- **இயக்க செயல்பாடு:** ஓர் சிறப்பான நிர்வாக அமைப்பு MSE-பல்வேறு கட்டங்களில் தனது பங்கையும் பொறுப்பையும் வரையறுத்துக் கொள்ளும். அதுவே ஓனர்ஷிப் மற்றும் தெளிவுத்தன்மையின் உணர்வை நிச்சயப் படுத்துகிறது. அதற்கு ஃபைனான்ஷியல் ரிப்போர்டுகளை ரெகுலராக பராமரிப்பதும் பொருளாதார மற்றும் அக்கவுன்ட்டிங் மெஷினரி சரளமாக செயல்படுகிறது என்று அர்த்தமாகும்.
- **நியதிகளை நிறைவு செய்வது:** நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை முறையாக நிறைவு செய்வது நாட்டில் நிலவும் ஒழுங்குமுறை நியதிகளை சரளமாக நிறைவு செய்வதற்கு வழி செய்யும் மற்றும் ஃபைனான்ஷியல் மற்றும் நான்-ஃபைனான்ஷியல் சர்வீஸ்கள்/ஃபெஸிலிடிகளை சுலபமாக பெற வழி செய்யும்.

# கார்ப்போரேட் MSEs களுக்கு

- **வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மை:** எல்லா பங்குதாரர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பு பிஸ்னஸ்ஸில் வளர்ச்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் வழி செய்யும்
- **முதலீட்டை கவர்தல்:** நல்ல கார்ப்போரேட் நிர்வாக அமைப்பைக் கொண்டிருக்கும் பிஸ்னஸ் முதலீட்டாளர்களால் நம்பகமானதாகவும், ஆபத்து அம்சங்கள் குறைந்ததாகவும் கருதப்படும். அது கவர்ச்சிகரமான விகிதாச்சாரத்தில் முதலீடு சுலபமாக கிடைப்பதற்கு வழி செய்யும்.
- **பங்குதாரர்களுக்கு உயர் வேல்யு** : உயரிய நம்பிக்கை மற்றும் கம்பெனியின் மதிப்பு முதலீட்டாளர்களின் லாயல்டியை பெறுகிறது என்று அர்த்தமாகும். இதன் விளைவால் அவர்கள் அத்தகைய கம்பெனிகளுக்கு பிரீமியத்தை தாராளமாக செலுத்துவார்கள்.
- **முதலீட்டாளர்களின் நம்பிக்கை**: சிறப்பான நிர்வாக பழக்கம் வழங்கும் நம்பகத்தன்மை முதலீட்டாளர்களிடையே நம்பிக்கை கொள்ள வழி செய்யும். அது நீண்ட கால முதலீட்டை கவர்வதற்கு வழி செய்யும்.
- **இயக்க செயல்பாடு**: ஒரு சிறந்த நிர்வாக அமைப்பு கம்பெனியின் பல்வேறு கட்டங்களில் பங்கு மற்றும் பொறுப்புகளை தொகுத்து வழங்குதலை உறுதிபடுத்துகிறது. அது பங்குதார்ர்களிடையே ஏற்படக்கூடிய நலன்களின் மோதலை தவிர்த்து சரிபார்க்கப்படுவதை நிச்சயப்படுத்தும். மேற்கொண்டு தன்னிச்சையாக செயல்படும் டைரக்டர்கள் இருப்பதால் எந்த காழ்ப்புணர்வும் இல்லாமல் அல்லது தனி விரோதம் இல்லாமல் திட்டமிட்ட எண்ணங்கள் உருவாக வழி செய்யும். ஃபைனான்ஷியல் ரிப்போர்ட்டுகளை ரெகுலராக பராமரிப்பதும் கம்பெனியின் ஃபைனான்ஷியல் மற்றும் அக்கவுன்டிங் மெஷினரி சுமூகமாக செயல்பட உதவும்.
- **நியதிகளை நிறைவு செய்தல்** : கார்ப்போரேட் நிர்வகிப்பின் சட்டதிட்டங்களை முறையாக நிறைவு செய்வது இறுதியாக நாட்டில் நிலவும் ஒழுங்குமுறை நியதிகளை கடைபிடிக்க வழி செய்து கட்டுப்பாட்டையும் படிப்படியான வளர்ச்சியையும் மேம்படுத்தும்.

# சிறப்பான நிர்வாக இகோஸிஸ்டம்



# MSEs-ல் சிறப்பான நிர்வாகம்: தயக்கம் மற்றும் அதற்கான காரணங்கள்

பெரும்பாலான MSEs எதுவும் தங்கள் நிருவனங்களில் முறைப்படியான நிர்வாக கட்டமைப்பு எதையு நிலை நாட்டுவதில்லை. கார்ப்போரேட்டுகள் மட்டுமே சிறப்பான நிர்வாகத்துக்கு  அதிகம் பொருந்தும் என்ற எண்ணெ நிலவி வருகிறது.

அத்தகைய தயக்கத்திற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒருசில கீழ்க்கண்டவாறு

### விழிப்புணர்வு இல்லாமை

பெரும்பாலான கம்பெனிகள் சிறப்பான நிர்வாக கட்டமைப்பை நடைமுறைப் படுத்துவதால் கிடைக்கும் பயன்களைப் பற்றி அறியாமலேயே இருக்கின்றனர்.

### நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் செலவினங்கள்

கம்பெனிகளில் சிறப்பான நிர்வாக கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதால் நிறைய செலவுகள் ஏற்படும் என்று கருதப்படுகிறது.

### கட்டுப்பாட்டை இழந்து விடுவோமோ என்ற அச்சம்

பெரும்பாலான கம்பெனிகள் குடும்பத்தால் அல்லது பார்ட்னர்களால் குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள்/நண்பர்கள்/உறவினர்களால் நடத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன மேலும் கம்பெனியின் தொடக்கம் முதற்கொண்டு பிஸ்னஸ்ஸை நடத்திச் செல்லும் தலைமைப் பொறுப்பு அவர்களிடமே இருந்து வருகிறது. பொதுவாக அத்தகைய சூழ்நிலைகளில் ஒரு சிறிய குரூப் எல்லா அதிகாரங்களையும் தன் வசமே வைத்துக் கொண்டு பிஸ்னஸ் பற்றிய எல்லா நிரணயங்களையும் அதன் கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்கிறது. இந்த குரூப் தங்களிடமிருந்து எந்த அதிகாரமும் பறிபோய் விடக் கூடாது என்றும் அதை விட்டுக் கொடுக்க தயக்கமும் காட்டி தன்னிச்சையாக செயல்படக்கூடிய எந்த அமைப்பையும் உருவாக்குவது இதனால் கைவிடப்படுகிறது.

### தகவல்கள்/வர்த்தக ரகஸியங்கள் இழப்பின் அச்சம்

ஒரு சிறிய குரூப்/குடும்பத்தால் நிர்வகிக்கப்படுவதால், கம்பெனிகள் பொதுவாக அத்தகைய நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவது தங்கள் பிஸ்னஸ்ஸின் ரகஸியங் களை வெளிப்படுத்த வழி செய்து தங்களின் பிஸ்னஸ் போட்டியாளர்களுக்கு அது உதவி அதனால் பிஸ்னஸ்ஸில் தங்களுக்கு இழப்பு ஏற்பட வழி செய்து விடும் என்று கருதுகின்றனர்.

### முறையற்ற அக்கவுன்டிங்

கம்பெனிகள் பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட அமைப்பு வைத்திருப்பதில்லை மற்றும் அக்கவுன்டிங் படிப்பு தகுதில்லாத அலுவலர்கள்/ குடும்ப உறுப்பினர்கள் அல்லது உரிமையாளர்களால் நிர்வகிக்கப்படுகிறது, அவர்களுக்கு ஃபைனான்ஷியல் ரிப்போர்ட்டுகளை தயாரிப்பதில் தேவைப்படும் அனுபவம் இருப்பதில்லை மற்றும் அக்கவன்டிங் தரங்களைப் பற்ற அவர்கள் அவ்வளவு அகியாதவரிகளாகவே உள்ளனர். அக்கவுன்டிங் பெரும்பாலும் குடும்பத்தின்/ உரிமையாளர்களின் நலன்களையே கருத்தில் கொண்டிருக்கின்றன மேலும் அத்தகைய நிறுவனங்கள் வரிச்சுமைகள்/ சட்டங்களை கண்டு அஞ்சுகின்றன.

# சிறப்பான நிர்வாகத்தை தழுவுதல் : கிடைக்கும் பயன்கள்

MSEs வெளிப்புறமிருந்து எதிர்கொள்ளும் பிரச்சனைகளை பல்வேறு கமிட்டிகள் அலசி ஆராய்ந்து அவற்றை களைய ஏராளமான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. இருந்தபோதிலும், கம்பெனிகள் தங்கள் பிரச்சனைகளை உள்ளுக்குள் தீர்த்துக் கொள்ள பார்ப்பதால் சிறப்பான நிர்வாகத்தை செயல்படுத்துவது சரிசமமான காரியமாகிறது, போதுமான கட்டமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் அத்தகைய நிகழ்வுகள் பிற்காலத்தில் ஏற்படுவதை தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறப்பான நிர்வாக அமைப்பை நிலைநிறுத்துவதால் கம்பெனிக்கு கிடைக்கும் ஒருசில பயன்கள் இவ்வாறாக விவரிக்கப்பட்டுள்ளன.

**a) <u>நன்கு வரையறுக்கப்பட்டுள்ள பிஸ்னஸ் : மலிவான கிரடிட் எளிதில் கிடைக்கிறது.</u>**

கார்ப்போரேட் கவர்னென்ஸ் கட்டமைப்பின் (CG) கீழ், கம்பெனி மெமோரண்டம் ஆஃப் அஸோஸியேஷன் (MoA), ஆர்டிகல்ஸ் ஆஃப் அஸோஸியேஷன் (AoA), போன்ற மிஷன் அண்ட் விஷன் டாக்குமென்ட்ஸ் ஆகியவற்றை சீராக பராமரித்து வருகின்றன. அவை கம்பெனியின் தெள்ளத் தெளிவுத்தன்மை மற்றும் அதன் விருத்தி வாய்ப்புக்கு வழி செய்கின்றன. மேலும், ஸீனியர் மேன்ஜ்மென்ட்டிற்கான கீ ரிஸல்ட் ஏரியா (KRAs) மற்றும் போர்டின் செயல்பாடுகளுக்கான கட்டமைப்பும் பராமரிக்கப்படுகின்றன. இது கம்பெனிக்கான சட்டதிட்டங்களை வகுத்து பிஸ்னஸ் வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன.

இதேபோன்று, கம்பனிகள் தெளிவான விஷன் டாக்குமெண்ட்டுகளையும் வகுக்க முடியும், அது வளர்ச்சிப்பாதைக்கான அவர்களின் இலக்கு மற்றும் எதிர்பார்ப்புகளின் சார்ட்டு பற்றி ஒரு அபிப்பிராயம் ஏற்பட உதவும். மேலும் இதுவே ஊழியர்களிடையேயும், வெளிப்புற நபர்கள் மத்தியிலும் நம்பிக்கையை ஊட்டும். மேற்கொண்டு கிரடிட்டர்கள் தங்கள் வேலையை மேலும் சிறப்பாக புரிந்து கொள்ள உதவி செய்து கம்பெனிக்கு சுலபமான மற்றும் மலிவான கிரடிட் வழங்குவதற்கு வழி வகுக்கும்.

**b) <u>இயக்குவதில் ஒளிவு-மறைவற்ற தன்மை</u>**

பெரும்பாலும் ஒருசில தனிநபர்களிடையே/ உரிமையாளர்களிடையே முடிவெடுக்கும் அதிகாரத்தை நிர்ணயிப்பதில் முழு கவனம் செலுத்தப்படுவதால் அதில் பொறுப்பு கூறல் இருப்பதில்லை. உள்ஆட்கள் பெரும்பாலும் தங்களின் சுய இலக்குகளுக்கான ஃபண்டுகளை வேறு வழியில் திருப்பும் நோக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இது நிறுவனத்தின் மூலதனத்தை சூறையாட வழி செய்து விடும். மற்றும் இது கம்பெனியின் வளர்ச்சியை பாதித்து கம்பெனியை பொருளாதார ரீதியில் மந்த நிலைக்கு இட்டுச்செல்லும்

கம்பெனிகளில் தன்னிச்சையாக செயல்படும் கமிட்டிகளை நிறுவதல் மற்றும் ஓனர்ஷிப்பிலிருந்து மேனேஜ்மென்ட்டை பிரிப்பது தனிநபர் நலன் குறித்து பொருளாதார ரீதியாகவோ அல்லது வேறெந்த வழியிலோ எவ்விதமான முடிவுகளும் எடுக்கப்படாது என்பதை நிச்சயப் படுத்துகிறது. இது தொழில் நிறுவனத்தின் ஆரோக்கியமான பொருளாதாரத்திற்கும் கம்பெனி பயனுள்ள வகையில் இயங்குவதற்கும் வளி செய்யும்.

**c) <u>அபாய காரணிகளின் நிர்வகிப்பு</u>**

பெரிய கார்ப்போரேட்டுகளில், ஸ்பெஷலைஸ்டு டீம்கள் இருக்கும், அவை தொழில்துறையில் அண்மையில் ஏற்படக்கூடிய அபாய காரணிகளை போக்குவதற்கான வழிகளை தங்களுக்குள் அப்டேட் செய்து இனி வரவிருக்கு அபாயங்களை தடுக்க திட்டமிட்டுக் கொள்கின்றன. இது கம்பெனிக்கு ஓர் இன்ஷ்யூரன்ஸ் போல செயல்பட்டு ஏதாவது அதிர்ச்சிகள் பிஸ்னஸ்ஸிற்கு ஏற்பட்டால் அதை தன்னுள் கிரகித்துக்கொள்ள உதவி செய்து தடங்கல்கள் ஏற்படும் தருணங்களிலும்கூட லாபம் ஈட்டுவதை நிச்சயப்படுத்துகிறது. கம்பெனிகள் பெரும்பாலும் இதுபோன்ற ஸிஸ்டம் இல்லாமையால் அத்தகைய தடுமாற்றம் ஏர்படும் தருணங்களில் பெருமளவு நஷ்டம் காணுவதோடு வீழ்ச்சியும் அடைந்து விடுகின்றன. பாலிஸி மாற்றங்கள், மலிவான இறக்குமதி, உலகளாவிய தடங்கல்கள் போன்ற அதிர்ச்சிகளை கையாள்வதற்கு பயனளிக்கும் கட்டமைப்பு மற்றும் நிபுணத்துவம் வாயாந்த அலுவர்கள் இருப்பது மிகவும் அவசியமாகும். அதுவே ஏதாவது அதிர்ச்சி தரும் சம்பவங்கள் நேரிடும்போது கம்பெனி அவற்றை தாக்குப்பிடித்து நிலைத்து வலுவுடன் நிற்பதை நிச்சயப்படுத்தும்.

**d) <u>மதிப்பு உருவாக்கம்</u>**

நிர்வாக கட்டமைப்பின் கீழ் இயங்கும் கம்பெனிகள் ரெகுலராக போர்டு மீட்டிங்கை நடத்துகின்றன, அது பிஸ்னஸ் தேவைக்கேற்ப திறன் அல்லது திறனை மீண்டும் புகுத்துவது அவசியமா என்று பரிசீலிக்கின்றன. இந்த பழக்கம், கார்ப்போரேட் அல்லாத சிறு நிறுவனங்களில் கடைபிடிக்கப்பட்டால் அது நீண்ட காலம் வரை நீடித்து நிலைக்கும் திறனையும் அதோடு பொருளாதார நம்பகத்தன்மையையும் உறுதி செய்கிறது.

**e) <u>முன்னோக்கி திட்டமிடுதல்</u>**

போர்டு மீட்டிங்கை ரெகுலராக நடத்துவது கம்பெனியின் நீண்ட கால திட்டங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு தேவைப் படுமானால் அதை மறுநோக்கம் செய்வதையும் உறுதிபடுத்தும்.

**f) <u>மதிப்பு</u>**

நல்ல சிறப்பான நிர்வாக கட்டமைப்பை முறையாக கடைபிடிக்கும் ஓர் கம்பெனிக்கு, முறையான நிர்வாக கட்டமைப்பு தவறுவதால் ஏற்படக்கூடிய புகழும், மதிப்பும் குறையும் வாய்ப்பு குறைவாகவே இருக்கும். சிறப்பான நிர்வாக ஸிஸ்டம், வெளிப்புற முதலீட்டாளர்கள், கிரடிட்டர்கள், பொதுமக்கள் போன்றவர்களுக்கு மிகவும் முக்கிய ஸெல்லிங் அம்சமாக விளங்கும்.

# சிறப்பான நிர்வகிப்பை எவ்வாறு உறுதி செய்து கொள்ள முடியும்

சிறப்பான நிர்வகிப்பு, புரொஃபஷனல் மேனேஜ்மென்ட் பொறுப்புகளில் இருந்து ஓனர்ஷிப்பை தனியே பிரிப்பதாலும் மற்றும் பிஸ்னஸ் உரிமையாளர்கள், பார்ட்னர்கள் மற்றும் இதர பங்குதாரர்களுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய பங்கு மற்றும் பொறுப்புகளை படிப்படியாக நிலைநாட்ட முடியும்.

- வளர்ச்சியின்போது, நிர்வகிப்பு ஸிஸ்டத்தில் புரொஃபஷனல்களை சேர்ப்பது நிர்வகிப்பு ஸிஸ்டத்திற்கு மேலும் மதிப்பை கூட்டும்.
- பொருந்தக்கூடிய சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் நிறைவு செய்யப்படுவதை நிச்சயப்படுத்த வேண்டும்.
- ஃபைனான்ஷியல் மேனேஜ்மென்ட் ஸிஸ்டத்தில் நல்ல அனுபவசாலிகளை இடம் பெறச் செய்தல்.
- உள்கட்டத்தில்நிலையான இயக்க பழக்கங்கள் மற்றும் கோடு ஆஃப் பிஸ்னஸ் கண்டக்ட்டை அறிமுகப்படுத்த வேண்டும்.
- நிர்வாகத்தின் நிர்வகிப்பு மற்றும் டெக்னிகல் திறன்களை வளர்த்தல்
- பங்களிப்ப மற்றும் பொறுப்புகளுக்கான ஆர்கனைஸேஷன் அட்டவணையை ஏற்படுத்துதல்
- அலுவலர்களுக்கு ரெகுலர் டிரெய்னிங், திறன் வளர்ப்பு, மறு-திறன் வளர்ப்பு.
- செயல்முறை ஆய்வை உறுதிபடுத்திக் கொள்ள தன்னிச்சையான இன்டர்னல் ஆடிட் மெக்கானிஸம்
- வாரிது திட்டம் மற்றும் கருத்து வேற்றுமைக்கான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்துவது.

தற்சமயம், பெரும்பாலான MSEs நான்-கார்ப்போரேட்டுகளாகவே செயல்படுகின்றன. இருந்தபோதிலும் காலப்போக்கில் அவற்றுக்கு உதவக் கூடிய நிரவகிப்பு கட்டமைப்பை அவை ஏற்றுக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

# சிறப்பான நிர்வகிப்பு: அது எதை இணைக்கிறது

சிறப்பான நிர்வகிப்பின் பண்புக்கூறுகள் பின்வருமாறு:
a) பிஸ்னஸ் பிளானிங் மற்றும் பட்ஜெடிங்
b)அபாய காரணிகளின் நிர்வகிப்பு
c) உள்கட்ட கட்டுப்பாடு
d) நிலையான இயக்க செயல்முறைகள் (SOP)

A) **பிஸ்னஸ் பிளானிங் மற்றும் பட்ஜெடிங்**

பிஸ்னஸ் பிளான் என்பது, பிஸ்னஸ் இலட்சியம், எட்டக்கூடியவை என்பது ஏன் என்பதற்கான காரணங்கள் அல்லது பிஸ்னஸ் பிளானிற்கு ஸப்போர்ட் செய்வது மற்றும் இலட்சியத்தை எட்டுவதற்கு தேவையான ஆக்ஷன் பிளான் ஆகியவற்றின் ஓர் குழுமமாகும். இந்த பிஸ்னஸ் பிளானின் உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பு கம்பெனியின் இலக்குகுளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இது நிறுவனத்தின் கிடைக்கும் மாற்றுகளை அலசி ஆராய்ந்து அதில் மையம் கொள்வதற்கான மிச் சிறந்த உபாயமாகும்.

பட்ஜெட் என்பது ஓர் பிஸ்னஸ் பிளானாகும் அது ஃபைனான்ஷியல் வடிவமாக மாற்றம் பெறுகிறது. பிளானை தயாரிப்பதற்கு கீழ்க்கண்ட அம்சங்களை கவனத்தில் கொள்வது நல்லது.


a) ஒருசில திட்டங்கள் மற்றும் பிளான்கள் பின்பற்றுமடுமானால், பொருளாதார ரீதியாக ஓர் பிஸ்னஸ் எவ்வாறு செயல்படும் என்பதற்கான மாடலை உருவாக்குதல்

b) பிஸ்னஸ் தேவையை பொறுத்து வருடாந்திரமாகவோ அல்லது அரையாண்டாகவோ நியதிகள் பின்பற்றப்படலாம்.

**வெவ்வேறு விதமான பட்ஜெட்டுகள்**





**கீழ்க்கண்டவை உள்ள நீட்டிப்பு பட்ஜெட்டை தயாரிக்கவும்:**



**B) ரிஸ்க் மேனேஜ்மென்ட்**

ரிஸ்க் மேனேஜ்மென்ட் என்பது பயனளிக்கும் நிர்வகிப்பு கட்டமைப்பின் ஓர் முக்கிய அங்கமாகும். அதில் இவையும் உள்ளடங்கும்



எந்த கம்பெனி வேண்டுமானாலும், ரிஸ்க் மேனேஜ்மென்ட் திட்டங்களை பின்பற்றி பிஸ்னஸ்ஸின் குறிக்கோள்களை எட்ட முடியும், அதில் கீழ்க்கண்ட வழிமுறைகளும் உள்ளடங்கும்.

**அடையாளம் காணுதல்:** கம்பெனிக்கு ஏற்படும் அச்சுறுத்தலை அடையாளம் காணுதல். அவற்றில் இவையும் உள்ளடங்கும்: போட்டியில் அதிகரிப்பு, கச்சாப்பொருட்கள் பற்றாக்குறை, கவர்னென்ஸ் பாலிஸிகள் போன்றவற்றில் மாற்றம்.

**பரிசீலனை:** அடையாளம் காணப்பட்டதும், அதன் தீவிரத்தன்மையை அவை ஏற்படக்கூடிய வாய்ப்பை அலசி ஆராயலாம்.

**டிரீட்மென்ட்:** அபாய காரணிகளை கையாள்வதற்கான ஒருசில யுக்திகள்:

a) அபாய காரணிகளை போக்குவதை தவிர்ப்பு
b) அபாயங்களை குறைத்தல் அல்லது நீக்குதல்
c) ரிஸ்க்குகளை ஷேரிங்/அவுட் ஸோர்ஸிங் செய்தல்/இன்ஷ்யூரிங்
d) அபாய காரணிகளுக்கான தக்கவைப்பு அல்லது அதற்கான பட்ஜெடிங்

**செயலாக்கம்:** அபாயங்கள் தனிப்படுத்தப்பட்டதும் பிளான்களை செயல்படுத்துதல்

**மறுபரிசீலனை மற்றும் மதிப்பீடு:** ஆபாயங்களை போக்குவதற்கான நடவடிக்கைகள் சரியானவையா அல்லது அவற்றை திருத்தம் செய்ய வேண்டுமா என்பதற்கு காலாகாலத்தில் கம்பெனி அபாய காரணிகளை மறுபரிசீலனை செய்து மதிப்பிட வேண்டும்

**c) உள்புற கட்டுப்பாடு**

ஒரு கம்பெனி திறம்பட இயங்குவதற்கும் அதன் தீவிரத்தன்மைக்கும், நம்பகமிக்க ஃபைனான்ஷியல் ரிப்போர்டிங் மற்றும் சட்டதிட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் பாலிஸிகளோடு இணக்கமுள்ளதாக இருப்பது கம்பெனியின் நோக்கங்களை உறுதி செய்யும் பிராஸஸாகும்.

இதுவே கம்பெனியின் ஆதார வளங்கள் சரியான முறையில் இயக்கப்படுகின்றன, கண்காணிக்கப்படுகின்றன மற்றும் அளவிடப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் அம்சமாகும். இது பிஸிகலாகவும், (உதாரணமாக மெஷினரி மற்றும் சொத்துக்கள்), புலன்படாத வகையிலும் (உதாரணம்-டிரேட்மார்க்குகள் போன்ற மதிப்பு அல்லது இன்டெலக்சுவல் பிராபர்டி) ஏற்படும் மோசடிகள் எதுவும் ஏற்படாமல் தடுத்து கம்பெனியின் ஆதார வளங்களை பாதுகாத்து பராமரிக்க உதவும்.

ஒரு கம்பெனிக்கு உள்கட்டத்தில் கட்டுப்பாட்டின் முறையான ஸிஸ்டம் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது மற்றும் அது பயனுள்ள முறையாக வகையில் செயல்படுத்தப்படுகிறது என்பதை நிச்சயப்படுத்தும் பொறுப்பு உள்ளது.

## இன்டர்னல் கன்ட்ரோல் ஸிஸ்டத்தின் பாகங்கங்

**சுற்றுச்சூழல் கட்டுப்பாடு**

- ஸிஸ்டத்தின் இதர கூறுகளின் ஆதாரம்
- அதில் ஊழியர்களின் தார்மீக மதிப்புகள், எதிகல் மற்றும் நிர்வகிப்பு திறமைகள் மற்றும் நேர்மை ஆகியவை உள்ளடங்கும்

**அபாய காரணிகளி பரிசீலனை செய்தல்**

- உள்புற மற்றும் வெளிப்புற அபாயங்களை பரிசீலித்தல்
- நிர்வாகத்தால் அபாய நிலைகளை கட்டுப்படுத்துவதில் உறுதிப்பாடு

**கட்டுப்பாடு நடவடிக்கைகள்**

- ஒவ்வொரு குறிக்கோளுடனும் தொடர்புடைய அபாயங்களை தவிர்ப்பதற்கு நிர்வாகம் செய்த முடிவுகள்
- இதில் எல்லா ஊழிர்களும் பின்பற்ற வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் உள்ளடங்கும்

**தகவல் மற்றும் தகவல் தொடர்பு**

- முறையான நேரத்தில் முடிவு எடுப்பது மற்றும் ரிப்போர்டிங் செய்வதற்கு ஏற்புடைய தகவல்களை சேகரித்தல்
- தங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை ஊழியர்கள் அறிந்து கொள்வது மற்றும் அவர்களின் பொறுப்புகள் மற்றவர்களின் நடவடிக்கைகளுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதை உணர்த்துவது.

**கண்காணிப்பு**


- நிர்வாகம் இன்டர்னல் கன்ட்ரோல் பிராஸஸின் பயன்பாட்டை கண்காணிப்பது, ஏதாவது பிரச்சனைகள் எழும்போது அதற்கு தீர்வாக அவசியமான மாற்றங்களை கொண்டு வர வழி செய்யும்

**D) நிலையான இயக்க செயல்முறைகள் (SOP)**

ஒரு கம்பெனியால் ஸிஸ்டமேடிக் விதிமுறைகளை நிறைவு செய்வது ஊழியர்கள்/ தொழிலாளிகள் கடினமான பணிகளை திறம்படவும், ஒரே சீராகவும் தவறான தகவல்களை குறைத்து தரமுள்ளதை அளிக்கவும் வழி செய்யும். மேலும் கம்பெனியின் இலக்குகள் மற்றும் திட்டங்களை செயலிழக்க வைப்பதையும் தடுக்கும்.

கம்பெனி ஒரு SOP-யை நிறுவ வேண்டும், அதை ஊழியர்கள் சுலபமாக குறிப்பெடுத்துக் கொள்வதற்கு மேனுவல் ரீதியாக என்கோடிங் செய்ய வேண்டும்.

## தொழில் நிறுவனத்தில் ஊழியர்கள் பயிற்சிகளை நடத்துவதற்காக உதவும் SOP மாதிரிகள்



இந்த வழிமுறைகளுக்கும் கூடுதலாக, ஒரு கம்பெனி, கீழ்க்கண்டவற்றின் வாயிலாக ஓர் பயனளிக்கவல்ல கவர்னென்ஸ் கட்டமைப்பு நிறுவப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**i) அதிகாரம் மற்றும் உறவு பொறுப்புகளை நிர்மாணித்தல்**

கம்பெனியானது, ஓர் ஆர்கனைஸேஷன் அட்டவணையை பராமரித்து வேலை முறையாகவம் உரிய நேரத்தில் செயல்படுத்தப்படுவதையும் நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு கம்பெனி எதிர்பார்க்கும் ஒவ்வொரு தனி நபரின் பங்கு மற்றும் பொறுப்புகளை அதில் தெளிவாக விவரிக்க வேண்டும். மேலும் பொறுப்புகளோடு சேர்ந்து யாருக்கு பொறுப்பளிக்கப்பட்டதோ அந்த நபருக்கு முறையான அதிகாரமும் வழங்கப்படுவது மிகவும் முக்கியமாகும்.

**ii) நியதிகளை நிறைவு செய்தல்**

கம்பெனி, நாட்டின் சட்டபூர்வமான, ஒழுங்குமுறை, ஃபைனான்ஷியல் திட்டங்களின் நியதிகளை முறையாக நிறைவு செய்கிறது என்பதை உறுதிபடுத்த வேண்டும்.

**iii) மனித வள நிர்வாகம்**

கம்பெனியின் கண்ணோட்டத்தின்படி நன்கு பயிற்சியளிக்கப்பட்டு உரிய பணிக்கு தேவைப்படும் திறன்களுக்காக ஊழியர்கள் அவற்றை கொண்டிருக்கிறார்கள் என்பதை நிச்சயப்படுத்த ஆள் சேர்ப்பு, நோக்குநிலை, சேர்ப்புக்கான பயிற்சிக்கான மெக்கானிஸத்தை கம்பெனி நிறவுவது மிகவும் அவசியமாகும். மேற்கொண்டு, ரெகுலர் இடைவெளிகளில் திறன் மேம்பாடு ஏதாவது தேவைப்படுகிறதா என்பதை கண்டறிந்து ஊழியர்களுக்கு மறு திறனளித்தலை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். ஊழியர்களை திருப்துபடுத்தி அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு அவர்களிடம் வேலை மதிப்பீடு, அவர்களது அபிப்பிராயங்கள் மற்றும் எக்ஸிட் இன்டர்வியூக்களை அவசியம் நடத்த வேண்டும்.

**iv) மேனேஜ்மென்ட் இன்ஃபார்மேஷன் ஸிஸ்டம் (MIS)**

மேனேஜ்மென்ட் இன்ஃபார்மேஷன் ஸிஸ்டம் அல்லது MIS என்பது ஒரு பிஸ்னஸ்ஸால் தகவல்களை ஒன்று திரட்டி, ஒன்று சேர்த்து மற்றும் அவற்றை பரிசீலனை செய்யும் ஸிஸ்டமாகும். எந்த வகையான தகவல் உபயோகிக்கப்படகிறதோ ஒரு பிஸ்னஸ்ஸிலிருந்து வேறொன்றுக்கு வேறுபடக்கூடும் மற்றும் டிபார்ட்மென்டுகளுக்கிடையேயும் வேறுபடக்கூடும். மேனேஜ்மென்ட் இன்ஃபார்மேஷன் ஸிஸ்டத்தின் பங்கு எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்- இயக்கத்தை மேம்படுத்துவது, திட்டங்கள் மற்றும் முடிவு எடுத்தல்.

# நிர்வகிப்பை மேம்படுத்த நிதிநிலையை நிர்வகித்தல்

எந்த பிஸ்னஸ்ஸை எடுத்துக் கொண்டாலும் சரி, அதற்கு மிக முக்கியமாக தேவைப்படுவதில் ஒன்று ஃபைனான்ஷியல் மேனேஜ்மென்ட்டின் தேவைகளை புரிந்து கொண்டு அதை நிர்வாகம் செயல்படுத்துவதாகும். பிஸ்னஸ் சரிந்து போவதற்கு காரணம் மோசமான நிதி நிர்வாகமேயாகும்.

A) **நிதி தேவைகள்**

- a) தற்போதைய மற்றும் எதிர்கால திட்டங்களின் அடிப்படையில் நிதி தேவைகளை அடையாளம் காணுதல்
- b) வொர்க்கிங் கேப்பிடல் தேவைகளின் அடிப்படையில் ரெகுலர் ஃபண்டு தேவைகளை கணக்கிடுவது
- c) தேவைப்படும் கேப்பிடல் செலவுகள், இண்ட,ட்ரி ஆப்பரேடிங் சைக்கிள், இண்டஸ்ட்ரி வொர்க்கிங் கேப்பிடல் போன்ற அம்சங்களை கவனித்தல்.
- d) உகந்த முதலீட்டு கட்டமைப்பை டெப்ட் மற்றும் ஈக்விடியின் சரியான விகிதாச்சாரத்தில் கண்டறிதல், அது மிகவும் குறைவான கேப்பிடல் காஸ்ட்டை பராமரிக்க வழி செய்யும்.

B) **கேப்பிடல் செலவுகளை குறைத்தல்**

- a) அபாய காரணிகளை குறைத்தல்/ பன்முகப்படுத்துதல்
- b) உகந்த டெப்ட்-ஈக்விடி விகிதாச்சாரத்தை பராமரித்தல் (டெப்ட்-ஈக்விடி ரேஷியோ அல்லது DER என்பது ஓர் ஃபைனான்ஷியல் ரேஷியோ ஆகும் அது கம்பெனியின் சொத்துக்கள் மற்றும் இயக்கத்தின் ஃபைனான்ஸின் ஈக்விடி மற்றும் டெப்ட் விகிதாச்சாரத்தை சுட்டிக்காட்ட உபயோகிக்கப்படுகிறது)

B) **ஃபண்டு ஃப்ளோ மற்றும் கேஷ் ஃப்ளோ பரிசீலனையை பராமரித்தல்**

- a) தேவைப்படும் ஃபண்டை தொடர்ந்து கண்காணித்தல்
- b) பல்வேறு ஆப்பரேடிங், ஃபைனான்ஷியல் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து ஃபண்டு ஃப்ளோவை பரிசீலிப்பது.
- c) பட்ஜெடிங் மற்றும் பிஸ்னஸ் பிளான்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குவது

D) **ஃபண்டு கிடைக்கும் ஆதாரங்கள்**

- a) பிஸ்னஸிற்கு தேவைப்படும் ஃபண்டு ஆதாரங்களை அடையாளம் காணுதல்
- b) அந்த ஆதரங்களை பன்முகப்படுத்தி ஆப்ஷன்களை தன் கைவசம் வைத்திருப்பது
- c) கன்டிஜென்ஸி தேவைக்காக ஹெட்ரூமை பராமரித்தல்

**வொர்க்கிங் கேப்பிடல் மேன்ஜ்மென்ட்**

1. ஒரு கம்பெனியானது தனது தற்போதைய அஸெட்டுகள் மற்றும் கடன்களை கூடுமானவரை சிறந்தமுறையில் கண்காணித்து அதை பயனுள்ள வகையில் உபயோகிக்கிறது என்பதை உறுதிபடுத்திக் கொள்வது.
2. வொர்க்கிங் கேப்பிடல் மேனேஜ்மென்ட்டின் அம்சங்கள்
   - a) தற்போதைய உடைமைகள்: ஓராண்டுக்குள் சுலபமாக ரொக்கமாக மாற்றக்கூடிய உடைமைகள். அன்றாடம் ஒரு பிஸ்னஸ்ஸை நடத்துவதற்கு தற்போதைய அஸெட்டுள் முக்கியமாக தேவை. தற்போதைய உடைமைகளை பயனுள்ள வகையில் நிர்வகிப்பது வொர்க்கிங் கேப்பிடல் மேனேஜ்மென்ட்டின் முக்கிய குறிக்கோளாகும். உதாரணத்தில் இவையும் உள்ளடங்கும். கேஷ் மற்றும் கேஷ் ஈக்வெலன்ட்ஸ், பேங்க் பேலன்ஸ், ரிஸீவபிள் போன்றவை.
   - b) தற்போதைய பொறுப்புகள்: பொறுப்புகள் என்பது ஓராண்டுக்குள் செலுத்த வேண்டிய நிலுவைத் தைகளாகும். உதாரணத்தில் கீழ்க்கண்டவையும் உள்ளடங்கும்: கிரடிட்டர்களுக்கு செலுத்த வேண்டியது, ஓராண்டுக்குள் செலுத்த வேண்டிய கடன்கள், சேல்ஸின் மீது வாங்கிய அட்வான்ஸ்கள் போன்றவை.
3. வொர்க்கிங் கேப்பிடல் மேனேஜ்மென்ட்டின் பாகங்கள்:
   - a) பெறக்கூடிய அக்கவுன்ட்ஸ்: நிலுவையிலுள்ள வருவாய்கள்: கடந்த விற்பனையில் கம்பெனிக்கு வாடிக்கையாளர்கள் மற்றும் கடனாளிகள் செலுத்த வேண்டியவை. கம்பெனி பெறக்கூடிய அக்கவுன்ட்ஸை உரிய நேரத்தில் சேகரிக்க வேண்டும். இதனால் ஃபண்டுகள் அதன் சுய கடனுக்கும் செலவுக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
   - b) செலுத்த வேண்டிய அக்கவுன்ட்ஸ்: இது குறுகிய காலத்திற்குள் ஒரு கம்பெனி செலுத்தியாக வேண்டிய தொகையாகும். அவசரமாக இருந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்திர்கு மட்டும் பேமெண்ட்டுகளை தாமதப்படுத்த முடியும். சிறப்பான கிரடிட் ரேட்டிங்கை உறுதிபடுத்தும் அதை வேளையில் ஸப்ளையர்கள் மற்றும் கிரடிட்டர்களிடையே நல்லுறவை வளர்த்துக் கொள்வதும் முக்கியமாகும்.
   - c) இன்வென்ட்ரி: இன்வென்ட்ரி என்பது கம்பெனியின் தலையாய சொத்தாகும். அதுவே சேல்ஸ் வருவாயாக மாறுகிறது. இன்வென்ட்ரியை கம்பெனி எவ்வளவு விரைவாக மாற்றுகிறதோ, அது கம்பெனிக்கு கிடைக்கும் லாபத்தை சுட்டிக் காட்டுகிறது. குறைவான இன்வென்ட்ரி என்றால் அது விற்பனையை கம்பெனி இழந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தமாகும். இருப்பினும், அதிக இன்வென்ட்ரி அளவு மட்டமானது வொர்க்கிங் கேப்பிடல் வீணாக உபயோகிக்கப்படுகிறது என்பதின் அடையாளமாகும்.

**அக்கவுன்டிங்**

கம்பெனியில் முறையான அக்கவுன்டிங் மேனேஜ்மென்ட் செயல்படுத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த கீழ்க்கண்டவற்றை பின்பற்றுவது அவசியமாகும்:

- டிராண்ஸாக்ஷன்களின் முறையான ரெகார்டிங்
- ஃபிக்ஸ்டு அஸெட்ஸ் ரெஜிஸ்டரின் அப்டேஷன்
- ஸ்டாக் ரெஜிஸ்டரை பராமரித்தல்
- ஃபிக்ஸ்டு அஸெட்ஸ் மற்றும் ஸ்டாக்ஸை நேரடியாக சரிபார்ப்பது
- ஃபிக்ஸ்டு அஸெட்டுகளின் முதுமை மற்றும் மேற்பார்வை
- வழக்கற்றுப்போன ஸ்டாக்குகளை அடையாளம் காணுதல்

# டிகோடு செய்யப்பட்ட கவர்னென்ஸ் பயன்கள்

## கிரடிட்டை சுலபமாக பெறுவது: 59 நிமிடங்களில் Psb லோன்கள்

இதில் கடன் வாங்குவோர் மற்றும் பெறுவோர் இவற்றுக்காக இணைய முடியும் -


**கடன் வாங்குபவர்**

போதுமான மற்றும் உரிய நேரத்தில் ஃபைனான்ஸை பெற்றுக் கொள்வதற்கு

**கடன் கொடுப்பவர்**

நிஜமான டேட்டா அதில் நேரத்தையும் செலவையும் கணிசமான அளவில் குறைத்தல்






- SIDBI, PSB-களிடமிருந்து அந்நிய கடன்களை வாங்குவதற்காக இதை உருவாக்கியுள்ளது
- உருவாக்கப்பட்டிருக்கும் அல்கோரிதம் நடப்பிலுள்ள டேட்டா பாய்ன்ட்டுகளை உபயோகிக்கிறது. அது GST-யின் உபயோகம் அதிகரிப்பு, இன்கம் டேக்ஸ் ரிடர்ன் (ITR) மற்றும் பேங்க் ஸ்டேட்மென்ட் மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது.
- இந்த போர்ட்டல் ஒரு தனி நபர் MSME-யின் உரிமையாளர் வெவ்வேறு இடங்களிலுள்ள பல்வேறு பேங்க் பிரான்ச்சுகளுக்கு செல்லும் சிரமத்தை நீக்குகிறது.
- போர்ட்டல், கிரடிடி வரையறைகளுக்கு தகுதிபெறும் MSME கஸ்டமர்களை பேங்குகள் அணுக வழி செய்கிறது.
- இந்த பொதுவான போர்ட்டல் MSMEs டிஜிட்டல் மூலமாக தகவல்களை சமர்ப்பிக்க வழி செய்து அவர்களின் கிரடிட் தேவைகளுக்காக பேங்குகளிலிருந்து இன்-பிரின்ஸிபல் ஒப்புதல்களை பெறச் செய்கிறது.

### கவர்னென்ஸ் மற்றும் வெளிப்படும் நன்மைகளின் நிஜ உண்மைகள்

- TAT மாதங்களிலிருந்து நாட்கள் மற்றும் அதிலிருந்து மணிக்கு குறைக்கப்பட்டிருப்பது தெரிகிறது.
- MSMEs சுய அதிகாரம் பெற்ற உணர்வைப் பெறுகின்றனர், ஏனென்றால் தங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற சிறந்த கடன் வழங்குபவர்களை அவர்கள் தேர்வு செய்து கொள்ள முடியும்.
- இன்-பிரின்ஸிபலை பெற முடியாதவர்கள் பேங்க்கிங்காக என்ன செய்ய வேண்டியுள்ளது என்பதை அதி விரைவில் தெரிந்து கொள்கிறார்கள்.
- சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், பேங்குகள் மற்றும் தொழிற்சாலைகள் கேஷ்ஃப்ளோ மாற்றங்கள், செயல்பாடுகள் மற்றும் தவறிய புராஜக்ஷன்களை பற்றிய எச்சரிக்கைகளை பெறுகின்றனர்.
- இது MSMEs அபாயங்களை கையாள அவர்களை தயார்படுத்தவதோடு இகோ ஸிஸ்டத்துக்கு இசைவானவர்களாகவும் அவர்களை ஆக்குகிறது.
- இன்-பிரின்ஸிபல் ஒப்புதலில் இருந்து பட்டுவாடாவுக்கு பேங்குகள் பிஸ்னஸ்ஸிற்கு முனைப்புடன் இயங்க பயனுள்ள வகையில் செயல்படுகின்றன.

**“PSB லோன்கள் 59 நிமிடங்களில்” போர்ட்டல் ஏற்கனவே முறையான வழிப்படியும், சிறப்பான நிர்வகிப்பையும் கொண்ட கம்பெனிகளுக்கு இன்-பிரின்ஸிபல் ஒப்புதலை 90,0000+ MSMEs-களுக்கு கிடைக்க வழி செய்துள்ளது.**

GST-யில் நீங்கள் ரெஜிஸ்டர் செய்திருந்தால் (i), (ii) ரெகுலராக இன்கம் டேக்ஸ் ரிடர்னை ஃபைல் செய்திருந்தால் (ITR), (iii) பேங்க் அக்கவுன்ட்டை திருப்திகரமான வகையில் சீராக வைத்திருந்தால், அந்நிலையில் உங்கள் கம்பனி சிறப்பாக நிர்வகிக்கப்படுவதாக கருதப்படும். அதோடு ஃபாஸ்ட் டிராக் கிரடிட்டின் பயன்களும் உங்களுக்கு வழங்கப்படும். இது இந்த டிஜிட்டல் பிலாட்ஃபார்ம் அதாவது PSB லோன் 59 நிமிடங்களில் அப்ளை செய்வதின் மூலமாக சாத்தியமாகிறது. போர்ட்டல் வழியாக லோனுக்கு அப்ளை செய்யும் பிராஸஸ் கீழ்க்கண்டவாறு:



கடன் வாங்கும் MSME

ரெஜிஸ்டர் செய்து ஆன்லைனில் விண்ணப்பிப்பது

கஸ்டமர் டேட்டா ஃபில்


GST | ITR | பேங்க் ஸ்டேட்மெண்ட் | டேட்டா ஃபில் அப்

MCA ஆட்டோ ஃபில் | மோசடிகள் சரிபார்ப்பு | கன்ஸ்யூமர்/கமர்ஷியல் பியூரோ பரிசோதனைகள்

ஆட்டோ ஸ்கோர் மற்றும் பரிசோதனைகள்

ஆட்டோ ஸ்கோரிங் | புராடக்ட் பாலிஸி ஆட்டோ செக் | ஆட்டோ தகுதி கணக்கீடு | ஆட்டோ ஒப்புதல்

**வாடிக்கையாளர் கடன் வழங்குபவரை தெர்வு செய்து கொள்ளும் தகுதியை பெறுகிறார்**



**ஒப்புதல் கடிதத்தில் ரியல் டைம் இன் பிரினிஸிபி**

இதன் பிறகு பேங்க்கால் அதிவிரைவில் ஒப்புதல் மற்றும் பட்டுவாடாவிற்காக KYC, விஸிட் போன்றவை தொடரும்.
டேக்அவே: சிறப்பாக நிர்வகிக்கப்படும் கம்பெனிகள் ஃபைனான்ஷியல் மற்றும் ஃபைனான்ஷியல் சர்வீஸ்களை துரிதமாக பெறுகின்றன.

# MSME ஸெக்டருக்கு ஸ்பெஷல் ரெஜிஸ்ட்ரேஷன் ஏற்பாடுகள்

டர்ன்ஓவர் அடிப்படையிலான டிரேடிற்கு வழி செய்யும் நடவடிக்கைகளாக, கீழ்க்கண்ட சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு எநப ரெஜிஸ்ட்ரேஷன் தேவையில்லை.

(i) மாநிலங்களுக்கிடையில் வரி செலுத்தக்கூடிய சரக்குகளின் ஸப்ளையில் ஈடுபடுவோர், ஒரு நிதியாண்டில் அவரது மொத்த டர்ன்ஓவர் நுழைவு விலக்கான ரூ.40 லட்சத்துக்கும் மிகுதியாக இருக்குமானால் (மேலே பட்டியலிடப்பட்டபடி, (குறிப்பிட்ட சில மாநிலங்களில் ரூ. 20 லட்சமாக இருக்கும் பட்சத்தில்).

(ii) மாநிலங்களுக்கிடையே வரி செலுத்தக்கூடிய ஸப்ளை சர்வீஸில் ஈடுபட்டுள்ள நபர், ஒருவேளை அவரது மொத்த டர்ன்ஓவர் நிதியாண்டில் வரையறுக்கப்பட்ட நுழைவு விலக்கான ரூ.20 லட்சத்துக்கும் மிகாமல் இருந்தால் (மேலே பட்டியலிட்டபடி, குறிப்பிட்ட சில மாநிலங்களில் ரூ.10 லட்சமாக இருக்கும்பட்சத்தில்)

(iii) மாநிலங்களுக்கிடையே வரி செலுத்தக்கூடிய ஸப்ளை சர்வீஸில் மட்டுமே ஈடுபட்டுள்ள நபர் (சரக்குகள் அல்ல), நிதியாண்டில் அவரது மொத்த டர்ன்ஓவர் வரையறுக்கப்பட்டிருக்கும் நுழைவு விலக்கான ரூ.20 லட்சத்துக்கும் மிகாமல் இருந்தால் (மேலே பட்டியலிட்டபடி குறிப்பிட்ட சில மாநிலங்களில் ரூ.10 லட்சம்)

ஆதாரம்: http://cbic.gov.in/resources//htdocs-cbec/gst/GST_MSMEs_Booklet_01072019.pdf;

# சரக்கு மற்றும் சர்வீஸ் (GST) வரி வாயிலாக நிர்வகிப்பை மேம்படுத்தல்

ரெஜிஸ்ட்ரேஷன் மற்றும் GST நியதிகளை நிறைவு செய்வது நிறுவனத்தில் முறையான அக்கவுன்டிங் ரெகார்ட்ஸையும், இன்டர்னல் கன்ட்ரோலையும் கண்காணிக்க உதவும். மேலும் இது சிறப்பான நிபந்தனைகளின்பேரில் கிரடிட் ஃபெஸிலிடிகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் மேம்படுத்தும்.

GST ஸப்ளை மீது விதிக்கப்படும் ஒரு வரியாக இருப்பதால், மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு ஸப்ளையரும் அவர் வரி செலுத்தக் கூடிய சரக்கு அல்லது சர்வீஸை ஸப்ளை செய்கிறாரோ அல்லது இரண்டையுமே செய்கிறார் என்றால், நிதியாண்டில் அவரது மொத்த டர்ன்ஓவர் நுழைவு விலக்கை காட்டிலும் மிகுதியாக இருக்குமானால், அவர் GST செலுத்தும் பொறுப்புக்கு உள்ளாகிறார்.

சர்வீஸ் ஸப்ளை செய்பவர்களின் ரெஜிஸ்ட்ரேஷன் மற்றும் GST பேமெண்ட்டான ரூ. 20 லட்சத்துக்கு மொத்த டர்ன்ஓவரின் நுழைவு வரம்பிலிருந்து விலக்கு பெறுவதற்கு (மணிப்பூர், மிஸோரம், நாகாலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்களுக்கு ரூ.10 லட்சம்). 01.04.2019 முதல் சரக்குகளை ஸப்ளை செய்யும் நபர்களுக்கு ரெஜிஸ்ட்ரேஷன் மற்றும் GST பேமெண்ட் செலுத்துவதிலிருந்து மொத்த டர்ன்ஓவரின் நுழைவு விலக்கு ரூ. 40 லட்சம் ஆகும். (அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிஸோரம், நாகாலாந்து, புதுச்சேரி, சிக்கீம், தெலிங்கானா, திரிபுரா மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களுக்கு ரூ. 20 லட்சம்)

**வாலெண்டரி ரெஜிஸ்ட்ரேஷன்:** வரையறுக்கப்பட்ட நுழைவு வரம்புக்கும் குறைவான மொத்த டர்ன்ஓவரை கொண்டிருக்கும் நபர்கள் தங்களை வாலன்டரியாக ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம்.

**மொத்த டர்ன்ஓவர்:** மொத்த டர்ன்ஓவர் என்பது, வரி செலுத்தக்கூடிய எல்லா ஸப்ளைகளின் மொத்த மதிப்பாகும் (ரிவர்ஸ் சார்ஜ் அடிப்படையில் ஒரு நபரால் வரி செலுத்தக்கூடிய இன்வேர்ட் ஸப்ளையின் மதிப்பு நீங்கலாக), இதில் ஸப்ளை நீங்கலாக, சரக்குகளின் ஏற்றுமதி அல்லது இரண்டுமே மற்றும் மாநிலங்களுக் கிடையிலான ஸப்ளைகள், அதற்கு அதே பர்மனென்ட் அக்கவுன்ட் நம்பரை வைத்திருக்கும் நபர், அது GST சட்டங்களின் கீழ் அகில இந்திய அளவில் கணக்கிடப்பட் டதாகும். மொத்த டர்ன்ஓவரில், தனது பிரின்ஸிபல்கள் சார்பாக நபரால் மேற்கொள்ளப்பட்ட ஸப்ளைகள், ஆனால், அவர் வேலை செய்யும் தொழிலாளியாக இருந்தால், வேலை செய்த சரக்குகளின் மதிப்பு நீங்கலாக இருக்கும்.

**GST ரெஜிஸ்ட்ரேஷன்** : ரெஜிஸ்ட்ரேஷன் செய்ய தகுதியில்லாத நபர்கள்: குறிப்பிட்ட சில நபர்கள் ரெஜிஸ்ட்ரேஷன் செய்து கொள்ள தேவையில்லை அதாவது (i) GST சட்டங்களின் கீழ் வரி செலுத்த வேண்டியிராத சரக்குகள் மற்றும் சேவைகளை ஸப்ளை செய்யும் பிஸ்னஸ்ஸில் ஈடுபட்டிருக்கும் நபர்கள், (ii) விவசாயிகள், நிலத்தை பயிரிடுவதால் கிடைக்கும் அறுவடையை ஸப்ளை செய்வோர், (iii) வரி செலுத்தக்கூடிய சரக்குகளை தயாரிப்பதில் மட்டுமே ஈடுபட்டுள்ள நபர்கள், அதில் அதை பெற்றுக் கொள்ளும் நபரால் செலுத்தக் கூடிய ரிவர்ஸ் கட்டணங்கள் அடிப்படையில். MSME ஸெக்டர்களுக்கான ஸ்பெஷல் ரெஜிஸ்ட்ரேஷன் ஏற்பாடுகள்.

டர்ன்ஓவர் அடிப்படையிலான டிரேடிற்கு வழி செய்யும் நடவடிக்கைகளாக, கீழ்க்கண்ட சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு GST ரெஜிஸ்ட்ரேஷன் தேவையில்லை.

(i) மாநிலங்களுக்கிடையில் வரி செலுத்தக்கூடிய சரக்குகளின் ஸப்ளையில் ஈடுபடுவோர், ஒரு நிதியாண்டில் அவரது மொத்த டர்ன்ஓவர் நுழைவு விலக்கான ரூ.40 லட்சத்துக்கும் மிகுதியாக இருக்குமானால் (மேலே பட்டியலிடப்பட்டபடி, (குறிப்பிட்ட சில மாநிலங்களில் ரூ. 20 லட்சமாக இருக்கும் பட்சத்தில்).

(ii) மாநிலங்களுக்கிடையே வரி செலுத்தக்கூடிய ஸப்ளை சர்வீஸில் ஈடுபட்டுள்ள நபர், ஒருவேளை அவரது மொத்த டர்ன்ஓவர் நிதியாண்டில் வரையறுக்கப்பட்ட நுழைவு விலக்கான ரூ.20 லட்சத்துக்கும் மிகாமல் இருந்தால் (மேலே பட்டியலிட்டபடி, குறிப்பிட்ட சில மாநிலங்களில் ரூ.10 லட்சமாக இருக்கும்பட்சத்தில்)

(iii) மாநிலங்களுக்கிடையே வரி செலுத்தக்கூடிய ஸப்ளை சர்வீஸில் மட்டுமே ஈடுபட்டுள்ள நபர் (சரக்குகள் அல்ல), நிதியாண்டில் அவரது மொத்த டர்ன்ஓவர் வரையறுக்கப் பட்டிருக்கும் நுழைவு விலக்கான ரூ.20 லட்சத்துக்கும் மிகாமல் இருந்தால் (மேலே பட்டியலிட்டபடி குறிப்பிட்ட சில மாநிலங்களில் ரூ.10 லட்சம்)

**கண்டிப்பாக ரெஜிஸ்ட்ரேஷன் செய்து கொள்ள வேண்டியவர்கள்** : GST சட்டங்கள், ஒருவேளை அவர்களின் மொத்த டர்ன்ஓவர் நுழைவு வரம்புக்கும் கீழே இருந்தாலும் குறிப்பிட்ட சில ஸப்ளையர்கள் கண்டிப்பாக தங்களை ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறது. அந்த ஸப்ளையர்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

(i) வரிசெலுத்தக் கூடிய மாநிலங்களுக்கிடையே சரக்குகளை ஸப்ளை செய்யும் நபர்கள்

(ii) வரி செலுத்தக்கூடிய ஸப்ளைகளை செய்யும் கேஷூவல் நபர்கள்

(iii) ரிவர்ஸ் கட்டணங்களின் கீழ் வரி செலுத்த வேண்டிய நபர்கள்

(iv) மற்றொரு வரி செலுத்தக் கூடிய நபர்களின் சார்பாக அவர் ஏஜன்ட்டோ அல்லது மற்றவரோ, அத்தகைய வரி செலுத்தக்கூடிய ஸப்ளைகளை செய்யும் நபர்கள். MSMEs இந்த ஏற்பாட்டை கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமாகும்.

# இறுதியாக, தொழில்முனைவர்கள் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவைகளை பற்றி பார்ப்போம்

**தொழில் முனைவர்கள் செய்ய வேண்டியவை**

- பிஸ்னஸ் சுழற்சியை அறிந்து கொள்ளுங்கள்
- உங்கள் மார்க்கெட் நிலவரங்கை தெரிந்து கொள்ளுங்கள்
- உங்கள் மாநில/மத்திய அரசின் இண்டஸ்ட்ரியல் பாலிஸிகளை அறிந்து கொள்ளுங்கள்
- டெக்னாலஜி, தர சான்றுகளை அறிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் பிஸ்னஸ் நடத்தும் இடத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு பேங்க்கில் ஒரு கரண்ட் அக்கவுன்ட்டை தொடங்கிக் கொள்ளுங்கள். இது உங்கள் நேரத்தை மிச்சப்படுத்தவும், டிரான்ஸாக்ஷன்களை துரிதமாக மேற்கொள்ளவும் உதவும்.
- பிஸ்னஸ்ஸை நடத்துவதற்கான அத்தியாவசிய GST நம்பர், உத்யோக் ஆதார் ரெஜிஸ்ட்ரேஷன் போன்ற ரெஜிஸ்ட்ரேஷனை செய்து கொள்ளுங்கள்.
- ஃபைனான்ஷியல் டிரான்ஸாக்ஷன், பில்ஸ், GST பேமெண்ட், GST ரிடர்ன்ஸ், PF ரிடர்ன்ஸ் போன்றவற்றுக்கான முறையான ரெகார்டுகளை வைத்துக் கொள்ளுங்கள்.
- கிரடிட் நிபந்தனைகிளின்படி உரிய தேதியில் கச்சா பொருட்களின் ஸப்ளையருக்கு பேமெண்ட் செலுத்துங்கள்.
- சட்டபூர்வமாக செலுத்த வேண்டியவை, மின்கட்டணம், டெலிபோன் பில்கள் ஆகியவற்றுக்கு உரிய தேதியில் அல்லது அதற்கு முன்பதாக பேமெண்ட் செலுத்துங்கள்.
- உங்கள் எல்லா லோன் இன்ஸ்டால்மென்ட்டுகள், கிரடிட் கார்டுக்கு செலுத்த வேண்டியவற்றுக்கு உரிய தேதிக்கு முன்பதாக பேமெண்ட் செலுத்துங்கள். இது உங்களுக்கு கடன் கொடுப்பவர்களுடன் நல்ல கிரடிட் பேமெண்ட் ரெகார்டை வைத்துக் கொள்ள உதவும்.
- பிஸ்னஸ்ஸின் கமர்ஷியல் ரெகார்டை வைத்திருங்கள்.
- மைக்ரோ/ சிறு பிஸ்னஸ் மேனேஜ்மென்ட் விவகாரங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிந்து முக்கிய பிஸ்னஸ் விவகாரத்தில் கவனம் செலுத்துங்கள்.
- எநப ரிடர்ன்ஸ், இன்கம்டேக்ஸ் ரிடர்ன் போன்ற முக்கிய ரிடர்ன்ஸ்களை ஃபைல் செய்வது மிகவும் முக்கியமாகும். அட்வான்ஸ் டேக்ஸை உரிய காலத்தில் செலுத்தி விடுங்கள், அதேபோல ஸ்டாச்சுடரி டாக்குமன்ட்ஸ், பிராஃபிட் அண்ட் லாஸ் அக்கவுன்ட், பேலன்ஸ் ஷீட் போன்றவற்றை தயாரித்து வைப்பும் மிகவும் அவசியமாகும்.
- வேலை செய்யும் பணியில் நீங்கள் ஈடுபட்டிருந்தாலும் கூட உங்கள் ரெகார்டுகளுக்காக பர்ச்சேஸ் ஆர்டர் பிரதியை பெறுவதற்க முயற்சி செய்யுங்கள்.
- பெண் அலுவலர்களை வேலைக்கு அமர்த்துவது மற்றும் அவர்களை தக்க வைத்துக் கொள்வதை ஊக்குவித்து, முடிவுகளை எடுத்தல் முதல் பன்முக தரப்பு மற்றும் சேர்க்கும் வரையில் அவர்களை ஈடுபடுத்துங்கள். பன்முக தொழிற்சாலைகள் மற்றவற்றுடன் ஒப்பிடுகையில் அதிக லாபத்தை ஈட்டுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன.
- ஆப்பரேடிங் செலவுகள் (பிஸ்னஸ் ஆப்பரேஷனுடன் தொடர்புடையவை), மற்றும் கேப்பிடல் செலவுகளுக்கான பட்ஜெட் பிளான் (லேண்ட், பில்டிங், பிளான்ட் மற்றும் மெஷினரி ஆகியவற்றுக்கான செலவுகள்) போன்றவற்றை தொடர்ந்து கண்காணியுங்கள்
- நல்லுறவை வைத்துக் கொள்வது பிஸ்னஸ்ஸின் முக்கிய சிறப்பம்சமாகும். நேர்மறை உணர்வோடு இருங்கள் மற்றும் ஒரு கான்ட்ராக்ட் அல்லது ஆர்டரை பெறுவதாக இருந்தாலும் சரி, இழப்பதாக இருந்தாலும் சரி நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- இண்டஸ்ட்ரியல் அஸோஸியேஷன், மற்றும் உங்களைப் போல அதே பிஸ்னஸ்ஸில் இருப்பவரிகளுடன் நல்லுறவை வைத்துக் கொள்வது லேட்டஸ்ட் நிகழ்வுகள் மற்றும் மார்க்கெட்டின் போக்கு ஆகியவற்றோடு நீங்கள் பரிச்சயமுள்ளவர்களாக இருக்க உதவும்.
- நீங்கள் தேர்வு செய்து கொண்ட ஆக்டிவிடீஸ் தொடர்பான கான்ஃபரன்ஸ்கள் மற்றும் ஸெமினார்களில் பங்கேற்றிடுங்கள்.
- சுற்றுச்சூழலுக்கு உங்கள் பிஸ்னஸ் ஏற்படுத்தும் தாக்கத்தை புரிந்து கொண்டு சுற்றுச்சூழலுக்கு பொறுப்புள்ளவர்களாக இருங்கள்.
- கஸ்டமரிடமிருந்து பேமெண்ட் வருவதற்கு தாமதமானால், 3 மாதங்களுக்கும் அப்பாற்பட்ட செலவுகளை சமாளிக்க லிக்விட் வொர்க்கிங் கேப்பிடலை வைத்திருங்கள்.
- காலம் கடந்தவை உள்ளிட்ட பெறக்கூடியவை, செலுத்தக் கூடியவை பற்றி கண்காணியுங்கள்.

**தொழில் முனைவர்கள் செய்யக்கூடாதவை**

- கேஷ் டிரான்ஸாக்ஷனை குறைத்துக் கொள்ளுங்கள்
- இழப்புகளை புக்கிங் செய்வதின் அபாயமான சுழற்சியில் சிக்கிக் கொள்ளாதீர்கள். வரி செலுத்துவதை நீங்கள் ஒருமுறை தவிர்க்கலாம். ஆனால் உங்கல் வளர்ச்சி எப்போதைக்குமே தடைபட்டு போய் விடும். பிஸ்னஸ்ஸில் வரி செலுத்துவதை தவிர்ப்பதற்கு நஷ்டத்தைக் காட்டுவதை விட வருமானத்தின் மீதான வரியை செலுத்துவது நல்லது.
- மலிவான/பே அண்ட் யூஸ் வொர்க் ஸ்பேஸை உபயோகிப்பதை கைவிடுங்கள், ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை வசதிகளை உபயோகியுங்கள்.
- உங்கள் கம்பெனியில் வேலை செய்பவர்கள், அலுவலர்களின் ஊதியத்தை வழங்குவதில் தாமதம் செய்ய வேண்டாம். உரிய நேரத்தில் ஊதியம் வழங்குவது தொழில்துறையில் உங்களுக்கு நல்ல அலுவலர்கள் கிடைப்பதற்கு வழி செய்யும்.
- உங்களால் நிறைவேற்ற முடியாத வொர்க் ஆர்டரை பெறுவதற்காக எந்த உறுதிப்பாட்டையும் அளிக்காதீர்கள்.

# அதிநேர்த்தியான செயல்பாட்டுக்கான சுய பரிசீலனை (SAFE) - நிர்வகிப்பிற்கான ஓர் டூல் கிட்

SAFE - இது உங்கள் கம்பெனியில் கவர்னென்ஸின் அளவீட்டை பரிசீப்பதற்கான ஓர் எளிய டூல் ஆகும். உங்களின் சிறப்பான நிர்வகிப்பு ஸ்கோரின் வாயிலாக உங்கள் பிஸ்னஸ்ஸில் ஏற்கனவே நீங்கள் எதை உறுதிப்படுத்தினீர்களோ உங்களுக்கு எது தேவைப்படுகிறதோ, உங்கள் கவர்னென்ஸ் மெக்கானிஸத்தில் இருக்கும் இடைவெளிகளை உங்களால் அடையாளம் தெரிந்து கொள்ள முடியும் என்றும், அதற்காக எடுத்துக் கொள்ள வேண்டிய வழிமுறைகளை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

## இன்டர்னல் மேனேஜ்மென்ட்

| வரிசை எண் | கேள்விகள் | பதில் | ஆம் என்பதற்கு குறியிடுங்கள் (இல்லை என்பதற்கு 0) |
|---|---|---|---|
| 1. | உங்கள் பர்ஸனல் மற்றும் பிஸ்னஸ் இலட்சியங்களை நீங்கள் ஏற்படுத்தி இருக்கிறீர்களா மற்றும் அவற்றை மறுபரிசீலனை செய்து பார்த்திருக்கிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 3 |
| 2. | ஏதாவது முறையான வாரிசி நியமனம் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளதா? | ☐ ஆம் ☐ இல்லை | 4 |
| 3. | ஸ்டாப் மெம்பர்களிடையே அவர்களின் பங்கு மற்றும் ஆற்ற வேண்டிய பொறுப்புகள் குறித்து தெளிவான பிரிவு ஏதாகிலும் உள்ளதா? | ☐ ஆம் ☐ இல்லை | 3 |
| 4. | ஃபைனான்ஷியல் பட்ஜெட் முறையாக பராமரிக்கப்படுகிறதா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 5. | அவசியமான குவாலிடி மற்றும் ரெகுலேட்டரி ஸர்டிஃபிகேட்டுகள் ரெகுலராக புதுப்பிக்கப்படுகின்றதா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 6. | சட்டபூர்வமான ஒப்புதல்களை நீங்கள் ரெகுலராக பரிசீலித்து/ அப்டேட் செய்து மற்றும் அவற்றை புதுப்பித்துக் கொள்கிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 7. | அக்கவுன்ட்ஸ், HR போன்ற மிக முக்கியமான டிபார்ட்மென்ட்டுகளில் அவற்றை கையாள்வதற்கு திறமையான அலுவலர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 8. | GST போன்ற எல்லா சட்டபூர்வமான நிலுவைத்தொகைகளும் உரிய நேரத்தில் செலுத்தப் பட்டிருப்பதை நீங்கள் நிச்சயப் படுத்தி இருக்கிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 9. | வழக்கத்தில் இல்லாத ஸ்டாக்குகள் உரியகாலத்தில் அகற்றப்படுவதை நீங்கள் உறுதிபடுத்துகிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 4 |
| 10. | உங்கள் கம்பெனிக்கு முறையான ஸ்டாண்டர்ட் ஆப்பரேடங்க புரஸீஜர் (S. O. P.) மற்றும் கோடு ஆஃப் கண்டக்ட் உரிய இடத்தில் உள்ளதா? | ☐ ஆம் ☐ இல்லை | 3 |
| 11. | உங்கள் பிஸ்னஸ் மெக்கானிஸத்திற்கு ரெகுலராக ஆடிட்டை நடத்துகிறீர்களா (ஃபைனான்ஷியல், என்வைரன்மென்டல்)? | ☐ ஆம் ☐ இல்லை | 4 |
| 12. | உங்கள் சொந்த பணம் மற்றும் அதோடு கடன் வாங்கிய பணம் குறித்து அக்கறைப் படுகிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 13. | பிஸ்னஸ் கன்டினியூடி பிளான் உரியவகையில் கடைபிடிக்கப் படுகிறதா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 14. | ரிஸ்க் பரிசீலனை மற்றும் ரிஸ்க் மேனேஜ்மென்ட் உங்களுக்கு முக்கியமானவையா? | ☐ ஆம் ☐ இல்லை | 3 |

# இகோ-ஸிஸ்டத்திற்கான பதில்கள்

| வரிசை எண் | கேள்விகள் | பதில் | ஆம் என்பதற்கு குறியிடுங்கள் (இல்லை என்பதற்கு 0) |
|---|---|---|---|
| 1. | உங்கள் அலுவலர்களுக்கு தேவைப்படும்போது பயிற்சி, திறன் வளர்ப்பு, மறு-திறன் வளர்ப்பு மற்றும் திறன் மேம்பாடு கிடைப்பதை நீங்கள் நிச்சயப்படுத்துகிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 4 |
| 2. | உங்கள் ஊழியர்களின் நலனுக்காக EPFO, பென்ஷன் பிளான்ஸ், ஆக்ஸிடென்டல் இன்ஷ்யூரன்ஸ் போன்றவை கவனிக்கப்படுகிறதா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 3. | தங்களின் கைக்குழந்தைகள்/ இளம் பிள்ளைகளுக்கு பொருத்தமான அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதோடு அலுவலர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சரியான பணி செய்யும் நிலவரம் ஏற்படுத்தித் தரப்படுவதை நீங்கள் நிச்சயப்படுத்துகிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 4. | உங்கள் துறையில் மற்றும் பெருகி வரும் வாய்ப்புகளில் ஏற்படும் மாற்றங்களில் நீங்கள் கவனம் செலுத்துகிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 5 |
| 5. | அடிக்கடி நீங்கள் டிஜிட்டல் டிரான்ஸாக்ஷனை மேற்கொள்கிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 4 |
| 6. | லாபம் ஈட்டுவதைத் தவிர இந்த பூமி மற்றும் மக்களைப் பற்றி கவலைப்படுகிறீர்களா? | ☐ ஆம் ☐ இல்லை | 3 |
| 7. | ஸப்ளை, அலுவலர்களின் குடும்பங்களின் நலன்/ முன்னேற்றம் ஆகியவற்றை நீங்கள் கவனிக்கிறீர்களா | ☐ ஆம் ☐ இல்லை | 5 |

## முடிவுகள்

**<15:-** உங்கள் நிர்வகிப்பு மெக்கானிஸத்திற்கு ஒட்டுமொத்த மாற்றங்கள் தேவை. பிஸ்னஸ்ஸில் எவ்வாறு கவர்னென்ஸை மேம்படுத்துவது என்பதற்கான ஆலோசனைக் குறிப்புகளை இன்ஃபோ ஸீரீஸில் படித்து தெரிந்த கொள்ளுங்கள். வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கும் பிஸ்னஸ்ஸை நடத்துபவர்களிடம் அவர்கள் தங்கள் கம்பெனிகளில் சிறப்பான நிர்வாகத்தை எப்படி நிச்சயப்படுத்துகிறார்கள் என்பதை கேட்டறிந்து கொள்ளுங்கள்.

**15-35:** உங்கள் கவர்னென்ஸ் ஸிஸ்டம் திருப்திகரமாக உள்ளது, ஆனால் அதை கொஞ்சம் மேம்படுத்த வேண்டியுள்ளது. சிறப்பான கவர்னென்ஸிற்கு பெயர் பெற்ற பிஸ்னஸ்ஸின் வெவ்வேறான எக்ஸ்பர்ட்டுகளை அழைத்து உங்கள் கம்பெனியை சிறப்பான நிர்வாகத்திற்கு கொண்டுவர அவர்கள் தரும் அபிப்பிராயங்களை கேட்டறிந்து கொள்ளுங்கள்.

**35 மற்றும் அதற்கும் மேல்:** உங்கள் கம்பெனியில் சிறப்பான நிர்வாகம் ஓரளவுக்கு நல்ல நலையில் உள்ளது. இருப்பினும், சிறிய சுய கணக்கீட்டுடன் அதை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிந்து மார்க்கெட்டில் உங்கள் பொஸிஷனை உயர்த்திக் கொள்ளலாம்.

# இந்தியாவில் மிகச் சிறப்பான நிர்வகிப்பு

2018-ல் வெளியிடப்பட்ட இண்டியன் கார்ப்போரேட் கவர்னென்ஸ் ஸ்கோர் கார்டின்படி, இந்தியாவில் மிகச் சிறப்பான நிர்வகிப்பு ஸிஸ்டம் முறைப்படியாக உள்ளது என்பது தெரிய வந்துள்ளது. இந்த ஸ்கோர் கார்டு BSE, IFC அண்ட் இன்ஸ்டிடியூஷனல் இன்வெஸ்டர் அட்வைஸரி சர்வீஸஸ் (IiAS), HDFC பேங்க் லிமிடெட், இன்ஃபோஸிஸ் லிமிடெட் மற்றும் விப்ரோ லிமிடெட் ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப்பட்டதாகும். இந்த ரிப்போர்ட் திரு. உதய் கோட்டக் அவர்களின் தலைமையிலான உயர் மட்ட SEBI கமிட்டியின் பெஸ்ட் பிராக்டீஸ் தேவைகளின் அடிப்படையில் கம்பெனிகல் மதிப்பீடு செய்யப்பட்டன. இந்த கமிட்டி லிஸ்டட் நிறுவனங்களில் கார்ப்போரேட் கவர்னென்ஸ் விதிமுறைகள் ஒட்டுமொத்தமாக மாற்றப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

எல்லா வெளிப்புற காரணிகளும் MSE-யின் கட்டுப்பாட்டுக்குள் இல்லையைன்றபோதிலும், உள்புறத்தில் கவனம் செலுத்தி மேம்பாட்டிற்கான உபாயங்களை தனது வொர்க்கிங் கட்டமைப்புக்காக நிச்சயம் கண்டறிய முடியும். உங்கள் நிறுவனத்தின் வேலை தேவை என்பதை பங்குதாரர்களோடு கவனமாக கலந்துரையாடி கண்டறியலாம், மேலும் அதோடு நாட்டில் மிகச் சிறந்த நிர்வாக அமைப்பை மேற்கொண்டுள்ளவற்றை அறிந்து பொருத்தமான நிர்வகிப்பு பழக்கங்களின் கட்டமைப்பை பயன்படுத்துவது நிச்சயமாக அந்த நிறுவனத்தில் பெரும் அதிசயத்தக்க மாற்றங்களை கொண்டு வரும். ஏராளமான வெப்ஸைட்டுகள் உள்ளன, அவற்றிலிருந்து நீங்கள் சிறப்பான நிர்வகிப்பு மற்றும் அது தொடர்பான தகவல்கள் ஆகியவற்றை தெரிந்து கொள்ளலாம். ஒருசில உங்கள் குறிப்புக்காக கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

http://www.mca.gov.in/

https://iica.nic.in/

https://www.cii.in/

https://www.icai.org/

https://www.ifc.org/wps/wcm/connect/8f451d64-3274-4b72-a6fc-75770ce69e5e/CG_Scores_S%26P_BSE_100_Companies_Handbook.pdf?MOD=AJPERES&CVID=mfgA1oU

https://www.oecd.org/daf/ca/corporategovernanceprinciples/39490732.pdf

## மாற்றம் ஒன்று மட்டுமே தொடர்ந்து மாறக் கூடியதாகும்

இந்த இதழ் மூலமாக சிறப்பான நிர்வாகத்தின் முக்கியத்துவம் குறித்தும் அவற்றை எவ்விதமாக செயல்படுத்த முடியும் என்பது பற்றியும் நாங்கள் சில விவரங்களை அளித்துள்ளோம் என்று நம்புகிறோம். மாறி வரும் காலத்திற்கேற்ப மாற்றம் பெறுவது மற்றும் இந்த ஓட்டத்தில் தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்க சிறப்பான இண்டஸ்ட்ரி பழக்கங்களை மேற்கொள்வது மிக முக்கியமாகும். உங்கள் ஸ்வவலம்பன் பயணம் சுமூகமாக தொடர்வதற்கு உதவும் வகையில் நாங்கள் மேலும் சில தலைப்புடன் மேலும் அதிக விவரங்களுடன் உங்களை தொடர்பு கொள்வோம். எங்களின் அடுத்த இதழில் எங்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் எதாகிலும் இதர தலைப்புகள் இருந்தால் அதை தயவுசெய்து எங்களுடன் ஷேர் செய்து கொள்ளவும்.

# பயனுள்ள **லிங்க்குகள்**

1. SIDBI பற்றி மேலும் அதிக விவரங்கள் இதில் கிடைக்கின்றன. **https://www.udyamimitra.in/**
2. பேங்க்கபிலிடி பற்றிய அதிக விவரங்களை நீங்கள் இதில் காணலாம் **https://udyamitra.in/Content/ MSEbankabilitykit2.pdf**
3. உங்களின் விரிவான விசாரிப்புகளுக்கான பதில்களை நீங்கள் இதில் பெறலாம். **Visit https://www.udyamimitra.in/FAQs**
4. எதிர்கால தொழில்முனைவர்கள் தங்களை இதில் ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம் **https://site.udyamimitra.in/Login/Register**
5. அரசாங்க இ மார்க்கெட்பிளேஸ் (GeM) வெப்ஸைட்டில் நீங்கள் விற்பவராகவும், வாங்குபவராகவும் உங்கள் ரெஜிஸ்டர் செய்து கொள்ளலாம் **https://gem.gov.in/**

6(a). முத்ரா லோன் பற்றி மேலும் அதிக விவரங்களறிய (ரூ.10 லட்சம் வரை) காணவும் **mudra.org.in/FAQ.**

6(b). SC/ST மற்றும் பெண் தொழில்முனைவர்கள் ஸ்டாண்ட் அப் இண்டியாவின் கீழ் ஒரு உற்பத்திக்கூடம், டிரேடிங் அல்லது சர்வீஸ் யூனிட்டை தொடங்குவதற்கு ரூ.10 லட்சம் முதல் ரூ. 1 கோடி வரை லோன் வாங்கலாம். விவரங்கள் இதில் தரப்பட்டிருக்கின்றன **https://www.standupmitra.in/**

7. பெண் தொழில்முனைவர்கள் காணவும் **https://niti.gov.in/women-entrepreneurship-platform-web**
8. மென்டர்ஷிப் ஸப்போர்டிற்கு தயவுசெய்து இதில் எங்களுக்கு எழுதவும் **pnd_ndo@sidbi.in**

**பொறுப்பு துறப்பு**

இந்த ஸீரீஸானது இனி வருங்கால/தற்போதுள்ள ஸ்வவலம்பன்களுக்காக கொண்டு வரப்படுகிறது. இவை கட்டாயம் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் பேங்க்கின் (SIDBI) அல்லது குறிப்பிட்ட ஏதாவது கம்பெனியின் முழு நிவாரணத்துக்கான முழு கண்ணோட்டமாக இருக்க வேண்டுமென்பதற்கான அவசியமல்ல.

இந்த டாக்குமென்ட் SIDBI-யால் மிஷன் ஸ்வவலம்பனின் கீழ் நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு நல்ல முயற்சியாகும். இவை முக்கியமாக செயல்படுத்தப்பட்டுள்ள / அல்லது ஆதாரங்களின் வெவ்வேறு புராஜக்டுகளின் ஆதாரங்களை திரட்டி ஒன்று திரட்டப்பட்டுள்ளன. ஏதாவது பிழைகள் அல்லது தவறி விடப்பட்டவை ஆகியவற்றை தவிர்க்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அதே வேளையில் எக்காரணம் கொண்டும், எந்த நபருக்கும், எவ்விதமாகவும் SIDBI பொறுப்பேற்காது.

sidbi

**ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் பேங்க் ஆ:ப் இண்டியா**

**SIDBI டவர், 15, அஷோக் மார்க், லக்னோ – 226001, உத்தர பிரதேசம்**

sidbiofficial @sidbiofficial sidbiofficial

**www.sidbi.in**